# முயற்சியாண்மைக் கல்வி

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம்-10

(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)

வணிகக்கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
Web:www.nie.lk
Email: info@nie.

# முயற்சியாண்மைக் கல்வி

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம்-10

வணிகக்கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா

**முயற்சியாண்மைக் கல்வி**
தரம் - 10
ஆசிரியர் வழிகாட்டி

முதலாம் பதிப்பு: 2014
ISBN

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கடந்த காலந்தொட்டு கல்வியானது தொடர்ந்து மாற்றங்களுக்குட்பட்டு வருகின்றது. அண்மிய யுகத்தில் இம்மாற்றங்களானவை மிக வேகமாக ஏற்பட்டன. கற்றல் முறைகளைப் போன்று தொழில்நுட்பக் கருவிகளின் பாவனை மற்றும் அறிவுத் தோற்றங்கள் தொடர்பாகவும் கடந்த இரு தசாப்தங்களில் கூடியளவு மறுமலர்ச்சி ஏற்பட்டு வருவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்கமைய, தேசிய கல்வி நிறுவகமும் 2015 ஆம் ஆண்டுக்குரிய கல்வி மறுசீரமைப்பிற்காக எண்ணிலடங்காத பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. பூகோளமய ரீதியாக ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாகச் சிறந்த முறையில் அறிந்து உள்நாட்டுத் தேவைக்கமைய இசைவுபடுத்தி மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறையை அடிப்படையாகக் கொண்டு புதிய பாடதிட்டம் திட்டமிடப்பட்டு பாடசாலை முறைமையின் முகவர்களாகச் சேவையாற்றும் ஆசிரியர்களாகிய உங்களிடம் இவ்வாசிரியர் வழிகாட்டியை ஒப்படைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறான புதிய வழிகாட்டல் ஆலோசனையை உங்களுக்குப் பெற்றுக் கொடுப்பதன் நோக்கம், அதன் மூலம் சிறந்த பங்களிப்பை பெற்றுத் தரமுடியும் என்ற நம்பிக்கையாகும்.

இவ்வாறான ஆசிரியர் வழிகாட்டியானது வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் போது உங்களுக்குக் கைகொடுக்கும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. அதேபோன்று இவ்வழிகாட்டியின் துணைகொண்டு நடைமுறை ரீதியான வளங்களையும் பயன்படுத்தி மிகவும் விருத்தி கொண்ட விடயப் பரப்பினூடாக வகுப்பறையில் செயற்படுத்து வதற்கு உங்களுக்கு முழுமையான சுதந்திரமுண்டு.

உங்களுக்கு வழங்கப்படும் இவ்வாசிரியர் வழிகாட்டியைச் சிறந்த முறையில் விளங்கி, மிகச் சிறந்த ஆக்கபூர்வமான மாணவர் சமூகமொன்றை உருவாக்கி, இலங்கையை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் முன்னேற்றிச் செல்வதற்குப் பொறுப்புடன் செயற்படுவீர்கள் என நான் நம்பிக்கை கொள்கின்றேன்.

இவ்வாசிரியர் வழிகாட்டியானது இப்பாடத்துறையுடன் தொடர்புடைய ஆசிரியர்கள், வளவாளர்கள் என்போர்களின் சிறந்த முயற்சியினாலும் அர்ப்பணிப்பினாலும் உருவாக்கப் பட்டுள்ளது.

கல்வித் துறையின் அபிவிருத்திக்காக இக்கருத்தை மிக உயர்ந்ததாகக் கருதி அர்ப்பணிப்புடன் செயற்பட்ட உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எம். எப். எஸ். பி. ஜயவர்தன**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
விஞ்ஞான தொழில்நுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

## வளவாளர்கள்

| | | |
|---|---|---|
| **ஆலோசனையும் அனுமதியும்** | : | கலைப்பீடக் கருமங்கள் தொடர்பான குழு<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **பாட இணைப்பாளர்கள்** | : | டப்ளியு.எம்.எ.பி.விஜயசூரிய<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>வணிக கல்வித்துறை,<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **எழுத்தாளர் குழு<br>(உள்ளக ரீதியான பங்களிப்பு)** | : | டப்ளியு.எம்.எ.பி.விஜயசூரிய<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>எம்.ஏ.ஐ.பி.பெரேரா<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>எஸ்.கே.பிரபாகரன்<br>விரிவுரையாளர்<br>எஸ்.ஆர்.ரத்னஜீவ<br>உதவி விரிவுரையாளர் |
| **எழுத்தாளர் குழு<br>(வெளியக பங்களிப்பு)** | : | நீலமணி மெண்டிஸ்<br>முன்னாள் விரிவுரையாளர்<br>இலங்கை திறந்த பல்கலைக்கழகம்<br>டி.எஸ்.ராஜபக்ஷ<br>இலங்கை அதிபர் சேவை<br>இரா/ப/உடகம மகா வித்தியாலயம்<br>பலாங்கொடை<br>சிரிமா நாணயக்கார - ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம், எல்பிட்டிய<br>எம்.எச்.எம்.புஹாரி<br>முன்னாள் ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி பணிமனை கேகாலை<br>எல்.எம்.நவாஸ் - ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம் இப்பாகமுவ |
| **தமிழ் சரவை நோக்கு** | : | எஸ்.கே.பிரபாகரன்- விரிவுரையாளர்<br>தேசிய கல்வி நிறுவகம்<br>எல்.எம்.நவாஸ்<br>ஆசிரிய ஆலோசகர், இப்பாகமுவ |

# ஆசிரியர் வழிகாட்டியினைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

2007 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடத்திட்ட மறுசீரமைப்பின் அடிப்படையில் இலங்கையின் பாடசாலை முறைமையில் சிரேஷ்ட, இடைநிலை மட்டங்களில் தரம் 10, 11இல் முயற்சியாண்மைக் கல்விப் பாடம், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது. பூகோளமயமாதலின் ஒன்றாக புது யுகத்தில் இப்பாடம் பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்பட முடியும். முயற்சியாண்மைத் திறன்கள் தனிநபர்களினுள் காணப்படுகின்றதும் கட்டியெழுப்பக்கூடியதுமான மிகப் பெறுமதி வாய்ந்த உயர்மட்டத்திலான திறன்களாகும். முயற்சியாண்மையானது தனி நபர்கள் எனும் முறையில் செயற்படும் முறை தொடர்பானதொன்றாகும். இதன் காரணமாக முயற்சியாண்மைக் கல்விப் பாடம் தனி நபர்களிடத்தில் எண்ணங்களடங்கிய புரட்சியொன்றை உருவாக்கி மனப்பாங்கு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இதற்கமைய அவர்கள் சமூக, பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதனது பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

முயற்சியாண்மை தொடர்பில் ஆசிரியர் வகிபாகத்திற்குக் கூடிய கடப்பாடு எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்களுக்கு முயற்சியாண்மைக் கல்வியைப் பெற்றுக் கொள்ள வழிகாட்டும் போது ஆசிரியர் சம்பிரதாய முறையிலான ஆசிரியர் வகிபாகத்திலிருந்து நீங்குவதற்கும் மாணவர்கள் இயங்கக் கூடியவாறு கற்றலைப் பெறக்கூடிய பிரிவினர்களாக மாற்றமுற வேண்டிய நிலையேற்படும். வினாத்தொடுத்தலுடன் கூடிய கற்றல் முறையொன்றைப் பின்பற்றிச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு ஆசிரியர்கள் ஆயத்தமாதல் முக்கியமானதாகும். இவ்வாசிரியர் வழிகாட்டியில் பாடத்திட்டத்திற்குரிய அனைத்துத் தேர்ச்சி மட்டங்களுக்குமான கற்றல் கற்பித்தல் செயன்முறைகளுக்கான செயற்பாடுகள் முன்மொழியப்பட்டுள்ளன.

அச்செயற்பாடுகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி உத்தேச கற்றல் விளைவினை அடைந்து கொள்ளக் கூடியவாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்வதில் அவதானம் செலுத்துதல் முக்கியமானதாகும். அத்துடன், மேலதிகமாக இதில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச செயற்பாடுகளில் மட்டும் தங்கியிராது ஆசிரியர்கள் அறிந்துள்ளதும் பழக்கப்பட்டதுமான செயற்பாடுகளிலும் பாடத்தைப் பயன்படுத்துவது சிறந்தது. எவ்வாறாயினும் முயற்சியாண்மைக் கல்வியைக் கற்கும் மாணவர்கள் 10, 11 ஆம் தரங்களில் காணப்படும் பாடங்களுக்கமைய அவர்களுக்கு முயற்சியாண்மையின் மீது நாட்டம் ஏற்பட்டு முயற்சியாளர்களாக எண்ணக்கூடிய பிரிவினர்கள் எனும் நிலைக்கு மாற்றப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்குரிய அனைத்து நாடுகளிலும் உள்ள பாடசாலைகளில் முயற்சியாண்மைக் கல்வி நடைமுறைப்படுத்தப்படும். அவ்வொன்றியத்தின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட முயற்சியாண்மைக் கல்வி ஆசிரியர்களுக்கான வழிகாட்டலொன்றின் மூலம் எவரேனுமொருவர் முயற்சியாண்மையாளராவது எப்படி? எனும் விளம்பரத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீங்களும் கவனஞ் செலுத்துவது முக்கியமானதாகும்.

- முயற்சியாண்மைக் கல்வியானது யாதேனும் வணிகமொன்றை நடாத்திச் செல்லல் எவ்வாறு? என்பதனை விட அதிக விடயங்களைக் கொண்டதொன்றாகும். அது முயற்சியாண்மை மனப்பாங்கு, திறன், அறிவு என்பவற்றை விருத்தி செய்தல் எவ்வாறு என்பது தொடர்பானதாகும். சுருக்கமாகக் குறிப்பிட்டுக் கூறுவதாயின், எண்ணமொன்று செயலுருப் பெறுவதற்கான இயலுமையை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும்.

- ஆசிரியர்கள் தாம் முயற்சியாளர்களாக மாற்றமுறாது முயற்சியாளர்கள் எனும் நிலைக்கு எவ்வாறு மாற்றமுறுவது என்பதனை கற்பிக்க முடியாது.
- மாணவர்கள் ஆக்கபூர்வமானவர்களாகவும் புத்துருவாக்கத் தன்மையுடையவர்களாகவும் தம்மை வெளிப்படுத்தக்கூடிய முறைகளில் இயங்குவதற்கு முயற்சியாண்மைத் திறன்கள் தேவையானதாகும்.
- செயல்முறை ரீதியிலும் உண்மை இயல்பு நிலைக் கற்றல் திறன்களினூடாகவும் முயற்சியாண்மைத் தேர்ச்சிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.
- அனைத்துப் பாடங்களினூடாக மட்டுமின்றி வேறு தனியான பாடங்கள் மூலமும் முயற்சியாண்மைத் திறன்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- முயற்சியாண்மையானது கம்பனிகளைப் போன்று அரச நிறுவனங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருவதனால் முயற்சியாண்மைக் கல்வியில் முயற்சியாண்மைகளைப் போன்று உள்ளக முயற்சியாளர்கள் மீதும் கவனஞ் செலுத்தப்பட வேண்டும்.
- முயற்சியாண்மைக் கல்வியினை முழுமையாக உள்வாங்கிக் கொள்வதற்காக கல்வித் திட்டத்தில் அனைத்து மட்டங்களிலும் முயற்சியாண்மைக்குரிய கற்றல் விளைவினை கணிப்பீட்டு முறை, தரப் பாதுகாப்புச் செயற்பாட்டு விதிமுறைகள் என்பவற்றை விருத்தி செய்தல் வேண்டும். ஆசிரியர்களிடத்தே முயற்சியாண்மை அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை மேலெழச் செய்வதற்கு ஏற்றவகையில் இவற்றைத் திட்டமிடுதல் வேண்டும்.

கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் போது முயற்சியாண்மைக் கல்விக்குரிய பாடப் புத்தகத்தில் காணப்படும் ஒவ்வொரு தேர்ச்சிகளுக்குமேற்பப் பாடங்களின் உள்ளடக்கங்கள் தொடர்பாகச் சிறந்த முறையிலான விளக்கத்தினைப் பெற்றிருப்பது முக்கியமானதாகும். இவ்வாசிரியர் வழிகாட்டிற்கமைவாக மாணவர் பாடப் புத்தகத்தினையும் பயன்படுத்தி கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளைத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

**பாட இணைப்பாளர்**

# உள்ளடக்கம்

**பக்க இலக்கம்**

| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | vi |
| வளவாளர்கள் | v |
| ஆசிரியர் வழிகாட்டியினைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் | vi |
| கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள் | 1--54 |

# பாடத்திட்ட உள்ளடக்கம்

# அறிமுகம்

சிரேஷ்ட இடைநிலை மட்டங்களில் தரம் 10, 11 மாணவர்கள் கற்பதற்குரிய தெரிவுப் பாடமொன்றாக 'முயற்சியாண்மைக் கல்வி காணப்படுகின்றது. 2007ம் ஆண்டில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி மறுசீரமைப்பில் சிரேஷ்ட இடைநிலைப் பாடவிதானத்தில் தரம் 10, 11 வகுப்புகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடமொன்றாக முயற்சியாண்மைக் கல்விப் பாடத்தை குறிப்பிட்டுக் காட்ட முடியும். முயற்சியாண்மைக் கல்வியைக் கற்பதன் மூலம் கல்வியினால் விருத்தி செய்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் பொதுத்திறனான ஆளுமை விருத்திக்குரிய தேர்ச்சிகளையும் வேலை உலகிற்கு ஆயத்தமாகக் கூடிய தேர்ச்சிகளையும் சிறந்த முறையில் அடைந்து கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. முயற்சியாண்மைக் கல்வியானது உயிரோட்டம் கொண்ட பாடமொன்றாகும். அதே போன்று 21 ஆம் நூற்றாண்டின் புதிய அலையொன்றை ஏற்படுத்தும் பாடமொன்றாகவும் முயற்சியாண்மைக் கல்வி காணப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உட்பட்ட நாடுகளை உள்ளடக்கிய அனைத்து நாடுகளில் மாணவர்களுக்கு முயற்சியாண்மைக் கற்கைப்பாடத்தில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு கொள்கை ரீதியாகத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பாடத்தைக் கற்பதற்கு வசதி செய்து கொடுப்பதன் மூலம் 21 ஆம் நூற்றாண்டில் தோன்றக் கூடிய பூகோளமய ரீதியான சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு மாணவர்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள முடியும்.

இப்பாடமானது கனிஷ்ட இடைநிலைப் பாட விதானத்தில் 6 முதல் 9 வரையிலான தரங்களில் முதற்படியாக "பிரயோகமும் தொழினுட்பமும்" எனும் பாடத்தினூடாக அறிமுகப்படுத்திக் கற்பிக்கப்படுகின்றது என்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. இப்பாடத்தினைக் கற்கும் மாணவர்களுக்கு "முயற்சியாண்மை" தொடர்பான அடிப்படை விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் அம்மாணவர்களினால் 10, 11 ஆம் தரங்களில் 'முயற்சியாண்மை' எனும் பாடத்தினூடாக சுயமான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றினை விருத்தி செய்து கொள்வதற்கு முடியுமாக இருக்கின்றது. அத்துடன் க.பொ.த. உயர்தரத்தில் 'வணிகக்கல்வியினைக்' கற்கும் பொழுது முயற்சியாண்மை தொடர்பாக மேலும் விளக்கத்தைப் பெற்றுக் கௌள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இம் மாணவர்கள் உயர்கல்வியில் பிரவேசிக்கும்பொழுது பல்கலைக்கழகங்களிலும் இதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட முயற்சியாண்மைக் கற்கைப் பாடத்தை வகுப்பறையினுள் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களையும் குறிப்பிட்ட முறையில் பெற்ற அனுபவங்கள் என்பவற்றை கருத்திற்கொண்டு இப்பாடத்தினை மாணவர்கள் மிக பயனுள்ள பாடமாக மாற்றுவதற்காகச் இம்முறை சிற்சில மாற்றங்களைச் செய்து இப்பாடம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய முக்கியமாக பாடப்பரப்பின் ஆழத்தைக் குறைத்ததுடன் மிகவும் எளிமையான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டது மட்டுமன்றி மிகவும் தர்க்க ரீதியாக செயற்பாட்டு முறையில் தேர்ச்சிகள் துணைத் தேர்ச்சிகளாக படிமுறைப்படுத்தப்பட்டு அதற்குப் பொருத்தமான வகையில் பாடப் பரப்புக்கள் வடிவமைக்கப்பட்டன.

முயற்சியாண்மைக் கற்கையைக் கற்பதன் மூலம் தனிநபர்களுக்கும், நாட்டிற்கும் கூடுதலான பயன்கள் கிடைக்கப் பெற்றாலும் தரம் 10 இல் பிரவேசிக்கும் மாணவர்கள் பொதுவாக இப்பாடத்தை தெரிவு செய்யும். சந்தர்ப்பங்கள் மிகக் குறைந்த மட்டங்களிலே காணப்படுகின்றன. எனவே மாணவர்கள் இப்பாடத்தைத் தெரிவு செய்வது கல்வி அதிகாரிகளதும், ஆசிரியர்களதும் பொறுப்பாகும். இதற்கமைய இப்பாடத்தை தெரிவுத் செய்வதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கும், பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களை ஊக்கப்படுத்துவதற்கும், வணிகக் கல்விப் பணிப்பாளர்கள், பாட அபிவிருத்திப் பணிப்பாளர்கள், அதிபர்கள், பகுதிக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் தேவையான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி செய்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(மூலம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ஐஊவு) பயன்படுத்தல்.

2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்
அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்
விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(மூலம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## நோக்கங்கள்

01. ‘முயற்சியாண்மை’ தொடர்பில் அடிப்படை எண்ணக்கருக்கள் தொடர்பான அறிவினைப் பெறுதல்.

02. வணிக நடவடிக்கைகளின் தன்மை, வணிகங்களது சமூக மற்றும் பொருளாதார தேவைப்பாடு என்பவை தொடர்பான அடிப்படை விளக்கத்தினைப் பெறுதல்.

03. முயற்சியாண்மையின் மீது நாட்டம் ஏற்பட்டு அதன் உண்மையான செயற்பாட்டாளராக மாறுதல்.

04. சமூகத்தின் எந்தவொரு தனிநபர் வகிபங்கிலும் வெற்றிகரமான கருமங்களை ஆற்றுவதற்குரிய தகைமையைப் பெற்றுக் கொள்வதற்குரிய முயற்சியாண்மைத் தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்ளல்.

05. முயற்சியாண்மைக் கல்வித்துறையில் மேலதிக கல்வி நடவடிக்கைகள் மற்றும் தொழிலொன்றில் ஈடுபடுதல் என்பவற்றிற்குத் தேவைப்படும் அடிப்படை அறிவினைப் பெறுதல்.

06. சமநிலையான ஆளுமையுடன் கூடிய உயர் வினைத்திறன் கொண்ட தனிநபர் ஒருவராக மாற்றம் பெறுதல்.

07. மாறும் வணிகச்சூழலுக்குப் பொருத்தமாக மாற்றமடைந்து வெற்றிகரமான முயற்சியாளர் என்ற வகையில் கருமங்களை ஆற்றுவதற்கான இயலுமையைப் பெறுதல்.

08. வணிகமொன்றை மேற்கொள்வதற்குரிய வெற்றிகரமான ஆரம்பத்தினைப் பெற்றுக் கொள்ளலும் சுயமாகத் தொழிலொன்றை ஆற்றக்கூடியவராக மாற்றம் பெறுதலும்.

09. உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தி இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதன் மூலம் நாட்டிற்குக் கூடிய வருமானங்களைப் பெற்றுக் கொடுக்கும் தனிநபரொருவராக மாறுதல்.

10. பொருளாதார, சமூக ரீதியில் கூடிய அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளும் தன்னம்பிக்கையுடைய தனிநபர் ஒருவராக மாறுதல்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

### பாடசாலை மட்டம்

முயற்சியாண்மையானது மிக நடைமுறை ரீதியானதும் சமூக ரீதியானதுமான பாடமொன்றாகும். இப்பாடத்தில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் இயன்றளவு மாணவரை மையமாகக் கொண்டதாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், அதற்குப் பொருத்தமான வகையில் மதிப்பீட்டுக் கருவிகள் பாடசாலைகளால் திட்டமிடப்படல் வேண்டும். இங்கு கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறும் வேளையில் மதிப்பீட்டினையும் மேற்கொள்ள வேண்டியதுடன் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத் திட்டத்தினடிப்படையில் (SBA) கணிப்பீட்டுக் கருவிகளைத் தயாரிக்கும் பொழுது அதற்குப் பொருத்தமான நியதிகளைக் கட்டியெழுப்பி மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல் வேண்டும். இப்பாடத்திற்காகத் திட்டமிடப்பட்ட ஆசிரியர் வழிகாட்டியில் முன்மொழியப்பட்ட செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட கற்றல் பேறுகள் காணப்படும் முறைக்கேற்ப கணிப்பீடு, மதிப்பீடு என்பன இடம்பெற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வருட இறுதித் தவணைப் பரீட்சைகளுக்கான வினாப்பத்திரங்களைத் தயாரிக்கும் பொழுது பின்வரும் வினாப்பத்திரங்களின் மாதிரியும் கட்டமைப்பும் பின்பற்றப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முயற்சியாண்மைக் கல்வியானது வினாப்பத்திரம் I, வினாப்பத்திரம் II எனும் வகையில் 3 மணித்தியாலயங்களில் விடையளிக்கக் கூடிய இரு வினாப்பத்திரங்களைக் கொண்டது.

**தரம் - 10**

**வினாப்பத்திரம் I** - தேர்ச்சி 4 வரை உள்ளடக்கியவாறு பல்தேர்வு வினாக்கள் 25 ஐக் கொண்ட வினாப்பத்திரமாகும். 25x2=50

**வினாப்பத்திரம் II** - தேர்ச்சி 4 வரையில் உள்ளடக்கியவாறு கட்டமைக்கப்பட்ட வினாக்கள் 6 ஐ உள்ளடக்கியது. 5 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். 5 x 10 = 50 புள்ளிகளாகும்.

**தரம் - 11**

**வினாப்பத்திரம் I** - முழுமையான பாடவிதானத்தினை உள்ளடக்கியவாறு தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களையும், சுருக்கமான விடையளிக்கக் கூடிய வினாக்களையும் கொண்ட மொத்தம் 40 வினாக்களை உள்ளடக்கிய வினாப்பத்திரத்தினைக் கொண்டது. மொத்தம் 40 புள்ளிகளாகும்.

**வினாப்பத்திரம் II** - முழுமையான பாடவிதானத்தையும் உள்ளடக்கியவாறு தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு, கட்டுரை அமைப்புக் கொண்ட 07 வினாக்களை உள்ளடக்கியது. பரீட்சாத்திகள் 05 வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 12 புள்ளிகள் வீதம் 5 வினாக்களுக்கு 60 புள்ளிகளாகும். வினாப்பத்திரம் I, II ற்கான மொத்தக் காலம் 03 மணித்தியாலங்களாகும். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு வினாக்களைத் தயாரிக்கும்பொழுது விடய ஆய்வினை அடிப்படையாகக் கொண்ட வினாக்களை உருவாக்குவதற்கு முன்மொழியப்படும். வினாப்பத்திரத்தின் அனைத்து வினாக்களும் எதிர்பார்ப்பு கற்றற்பேறினை உள்ளடக்கக் கூடியவாறு உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வினாப்பத்திரத்தின் அனைத்து வினாக்களும் உத்தேச கற்றற் பேறினை அடிப்படையாகக் கொண்டிருக்குமாறு தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 7.0 முன்மொழியப்பட்ட தேர்ச்சிகள், தேர்ச்சிமட்டங்கள், பாட உள்ளடக்கம், கற்றற்பேறுகளும் பாடவேளைகளும் தரம் 10

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 1.0 முயற்சியாண்மையினையும் அதன் முக்கியத்துவத்தினையும் அறிந்து முயற்சியாளரொருவராவதற்கான விருப்பத்தினை வெளிப்படுத்துவார். | | | | 30 |
| | 1.1 முயற்சியாண்மை எண்ணக் கருவினைப் பகுப்பாய்வு செய்வார். | • முயற்சியாண்மை<br>• முயற்சியாண்மை - அறிமுகம்<br>• முயற்சியாண்மையுடன் தொடர்புடைய எண்ணக்கருவினை அறிமுகப்படுத்தல்:- ஆக்கபூர்வமான தன்மை; புத்துருவாக்கம்; இடர்களை ஏற்றல்<br>• மனித வளமொன்றான முயற்சியாண்மையின் சிறப்பும் அதன் முக்கியத்துவமும் | • முயற்சியாண்மை தொடர்பாக தனது சுயமான கருத்தினை விளக்குவார்.<br>• முயற்சியாண்மை எண்ணக்கருவுடன் இணைந்த அடிப்படைப் பதங்களை எளிமையாக விளக்குவார்.<br>• ஏனைய வளங்களுடன் ஒப்பிடுமிடத்து முயற்சியாண்மையின் விசேட தன்மைகளை கலந்துரையாடுவார். | 09 |
| | 1.2 முயற்சியாண்மைக்கும் வணிகத்துக்குமிடையிலான நெருங்கிய தொடர்புகளை தேடியறிவார். | • முயற்சியாண்மைக்கும் வணிகங்களுக்குமிடையிலான நெருங்கிய தொடர்பு<br>• "வணிகம், வணிகர்" அறிமுகம்<br>• முயற்சியாளருக்கும் வணிகருக்குமிடையிலான ஒத்த தன்மை<br>• முயற்சியாளருக்கும் வணிகருக்கும் இடையில் காணப்படும் வேறுபாடுகள்<br>• முயற்சியாளர்களில் காணப்படும் பல்வேறுபட்ட பரிமாணங்கள் (Various dimention of entrepreneurs)<br>  • வணிக முயற்சியாளர்கள்<br>  • சமூக முயற்சியாளர்<br>  • உள்ளக முயற்சியாளர் | • வணிகங்களது தன்மைகளை கலந்துரையாடுவார்.<br>• முயற்சியாளருக்கும் வணிகருக்கும் இடையே காணப்படும் ஒத்த தன்மைகளையும் வேறுபாடுகளையும் ஒப்பிடுவார்.<br>• முயற்சியாளர்களின் வகைகளை உதாரணங்களுடன் விளக்குவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 1.3 முயற்சியாளர்களிடம் விசேடமாகக் காணப்படும் பண்புகளைத் தேடியறிவார். | • முயற்சியாளர்களிடம் விசேடமாகக் காணப்படும் பண்புகள்<br>• ஆக்க பூர்வத்தன்மை (Creativity)<br>• புத்துருவாக்கத்தன்மை (Innovativeness)<br>• இடர்களை ஏற்றுக்கொள்ளல் (Risk taking)<br>• தூரநோக்கு (Visionary)<br>• சூழல் உணர்திறனும் சந்தர்ப்பங்களின் இனங்காணலும் (Environmental sensitivity and Recognition of opportunities)<br>• நேர்மனப்பாங்கு (Optimistic)<br>• சிரமமான நோக்கத்தை நிறைவேற்றுவதில் ஈடுபாடு (Achievement orientation)<br>• தனது வெற்றியானது சுயமான நம்பிக்கையினடிப்படையில் தீர்மானிக்கப்படும் என்பது தொடர்பான நம்பிக்கை (Internal Locus of Control)<br>• சுயாதீனமான எண்ணம் (Autonomy)<br>• நெகிழ்வுத்தன்மை (Flexbility)<br>• அதி கூடிய நாட்டம் (Passion)<br>• தொடங்குமாற்றல் (Initiative)<br>• முயற்சியாளர்களிடம் பொதுவாகக் காணப்படும் பண்புகள்<br>உதாரணங்கள்<br>• அர்ப்பணிப்பு (Dedication)<br>• பொதுவான புரிந்துணர்வு (Common Searce)<br>• சுய ஊக்கம் (Self Motivation) | • வழங்கப்பட்ட தனிநபர் பண்புகளிலிருந்து முயற்சியாளர்களிடம் விசேடமாகக் காணப்படும் பண்புகளை வேறுபடுத்திக் காட்டுவார்.<br>• முயற்சியாண்மைப் பண்புகளை இயல்பாகக் காணப்படும் பண்புகளுடன் ஒப்பிட்டு தன்னிடம் காணப்படும் முயற்சியாண்மைப் பண்புகளை வெளிப்படுத்திக் காட்டுவார்.<br>• வழங்கப்பட்ட முயற்சியாண்மைப் பண்புகளை பகுப்பாய்வு செய்வார். | 09 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • தன்னம்பிக்கை (Self Confidence)<br>• தகவல்களைத் தேடியறிதல் (Information Seeking) | | |
| | 1.4 முயற்சியாண்மையின் அனுகூலங்களைத் தேடியறிவார். | • முயற்சியாண்மையின் அனுகூலங்கள்<br>• முயற்சியாளருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள்<br>• தனது தலைவிதி தீர்மானிக்கப்படல்<br>• கருமங்களில் பல்லினத்தன்மைகள் உருவாகுதல்<br>• உள்ளார்ந்த திறமைகளை பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்<br>• சுயமான கூக்கத்துடன் கூடியது<br>• விருத்தி கருதி தனிநபர்களின் மேம்பாட்டிற் கான, சந்தர்ப்பத்திற்கு கூடிய வாய்ப்பளித்தல்<br>• கவர்ச்சிகரமான இலாபத்தை உழைத்தல்<br>• சமூக நலன்களுக்குப் பங்களிப்புச் செய்யக் கூடியதாக இருத்தல்<br>• சுதந்திரமானதும் தன்னம்பிக்கையுடன் கூடிய முழுமையான நிலைக்கு மாற்றமுறுதல்<br>• முயற்சியாண்மையினால் தேசிய பொருளாதா ரத்திற்குக் கிடைக்கும் அனுகூலங்கள்<br>• வேலைவாய்ப்புக்களை உருவாக்கல்<br>• வளங்களை உச்சமாகப் பயன்படுத்தல்<br>• தனிநபர்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுதல்<br>• பிரதேச அபிவிருத்தி | • தனி நபரொருவர் முயற்சியாளர் ஒருவராவதனால் அவருக்கு அனுபவிக்கக் கூடிய விசேடமான அனுகூலங்களை கலந்துரையாடுவார்.<br>• தனி நபரொருவர் வாழ்வாதார மொன்றாக தொழிலொன்றில் ஈடுபடாது வணிகமொன்றை மேற்கொள்வதற்கான காரணங்களை முன்வைப்பார்.<br>• முயற்சியாளர் தேசிய பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யப்படும் முறையினை சுட்டிக் காட்டுவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • புத்துருவாக்கத்தின் போது புதிய பொருட்கள், சேவைகளை அறிமுகப்படுத்தப்படுதல்<br>• வருமானப் பகிர்விலான முரண்பாடுகள் குறைவடைதல்<br>• வெளிநாட்டுச் செலாவணியை உழைத்தல்<br>• சுயாதீனமான, சுதந்திரமான பொருளா தாரமும் சமூகங்களும் உருவாதல் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 2.0 சிற்றளவு வணிக மொன்றின் வெற்றிக்கு முயற்சியா ளர் மூலம் நிறைவேற்ற வேண்டிய வகிபாகங் களைத் தேடியறிவார். | 2.1 முயற்சியாண் மைக்கும் சிற்ற ளவு வணிகங் களுக்குமிடையில் காணப்படும் தொடர்புகளை அறிந்து கொள் வார். | • சிற்றளவு வணிகங்கள்<br>• சிற்றளவு வணிகங்களின் அறிமுகம்<br>• சிற்றளவு வணிகங்களுக்கும் முயற்சி யாண்மைக்குமிடையிலான தொடர்பு<br>• இலங்கையின் பொருளாதார அபிவிருத் தியில் சிற்றளவு வணிகங்களின் முக்கியத்துவம்<br>• சிற்றளவு வணிகங்களின் பலங்களும் வரையறைகளும்<br>• சிற்றளவு வணிகங்கள் தோல்வியடைவதற் கான காரணங்கள்<br>• சிற்றளவு வணிகங்கள் வெற்றியடைவதற்காக மேற்கொள்ள வேண்டிய கருமங்கள் | • சிற்றளவு வணிகங்களில் காணப்படும் பண்புகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• இலங்கை போன்ற பொருளாதாரத்திற்கு சிற்றளவு வணிகங்களினால் கிடைக்கப் பெறும் நன்மைகளைச் சுட்டிக்காட்டுவார்.<br>• சிற்றளவு வணிகங்கள் தோல்வியடைவதற் கான காரணிகளை தவிர்ப்பதற்கான முன் மொழிவுகளை முன்வைப்பார். | 16<br>06 |
| | 2.2 சிற்றளவு வணிகமொன்றில் முயற்சியாள ரொருவரினால் நிறைவேற்றப் படும் முக்கிய பாத்திரங்களைத் தேடியறிவார். | • சிற்றளவு வணிக அமைப்பொன்றினுள் முயற்சியாளரொருவரின் பிரதான வகிபாகம்<br>• அறிமுகம்<br>• பிரதான வகிபாகங்கள்<br>• உரிமையாளன்<br>• தலைவன்<br>• முகாமையாளன்<br>• மேற்குறித்த வகிபாகங்களுக்குரிய கருமங்கள் | • முயற்சியாளரொருவர் வணிக அமைப் பொன்றினுள் மேற்கொள்ளும் முக்கிய வகிபாகங்களை தெளிவுபடுத்துவார்.<br>• வணிக அமைப்பினுள் முயற்சியாளர் ஒருவர் மேற்கொள்ளும் வகிபாகங்களுக் குரிய கருமங்களுக்கான உதாரணங்களை எடுத்துக் கூறுவார்.<br>• முயற்சியாளரொருவரின் ஒவ்வொரு வகிபாகமும் வணிகமொன்றின் வெற்றியில் தாக்கத்தைச் செலுத்தும் முறையினை கலந்துரையாடுவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.3 சிற்றளவு வணிகமொன்றை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காக முயற்சியாளரொருவர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய முகாமைத்துவத் தலைமைத்துவப் பண்புகளை அறிந்து கொள்வார். | • முகாமைத்துவ தலைமைத்துவப் பாத்திரங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு முயற்சியாளரொருவரிடம் இருக்க வேண்டிய அடிப்படைத் திறன்கள்<br>• அறிமுகம்<br>• தொழினுட்பம்<br>• மானிடம்<br>• கொள்கை ரீதியானது<br>• குழுவொன்றுடன் கருமமாற்றுதல்<br>• தொடர்பாடல்<br>• ஆலோசனை வழங்கல்<br>• முன்மாதிரியாகக் கருமங்களை ஆற்றல்<br>• குழுவினைப் பிரதிநிதிப்படுத்தல் | • தலைமைத்துவ, முகாமைத்துவ வகிபாகங்களைச் சிறப்பாக நிறைவேற்றிக் கொள்வதற்காக முயற்சியாளரிடம் இருக்க வேண்டிய அடிப்படைத்திறன்களைச் சுட்டிக் காட்டுவார்.<br>• வழங்கப்பட்ட தலைமைத்துவ முகாமைத்துவத் திறன்களைச் சுருக்கமாக விளக்குவார்.<br>• தலைமைத்துவ, முகாமைத்துவத் திறன்களானவை வணிகமொன்றின் வெற்றிக்குக் காரணமாக அமையும் முறையினை சுட்டிக்காட்டுவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 3.0 முயற்சியாளரொருவர் எனும் வகையில் வணிகச் சூழலைப் பகுப்பாய்வு செய்வார். | | | | 20 |
| | 3.1 வணிகச் சூழலை அறிந்து கொள்வதற்காக வணிக சூழற் காரணிகளை தனித்தனியாக தேடியறிவார். | • வணிகச் சூழல்<br>• அறிமுகம்<br>• வணிகச் சூழலை அறிந்து கொள்வதற்கான முக்கியத்துவம்<br>• வணிகச் சூழலை வகைப்படுத்தல்<br>• உள்ளக (அக) சூழல்<br>• வெளியக (புற) சூழல் | • வணிகச் சூழலை விளக்குவார்.<br>• முயற்சியாளரொருவர் எனும் வகையில் வணிகச் சூழல் தொடர்பில் கவனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுவார்.<br>• விளக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக வணிகச் சூழலை பிரிவுகளாக வகைப்படுத்துவார். | 03 |
| | 3.2 வணிக அகச் சூழற் தாக்கங்களின் செயற்பாட்டினை பகுப்பாய்வு செய்வார். | • அகச் சூழலும் அதன் தாக்கங்களும்<br>• அகச் சூழலும் அதன் காரணிகளும்<br>• அகச் சூழல் காரணிகளினூடாக உருவாகும் பலங்களும் பலவீனங்களும் | • வணிகமொன்றின் அகச் சூழலை உதாரணங்களுடன் விளக்குவார்.<br>• வணிகமொன்றின் அகச்சூழலில் இனங்காணப்பட்ட பலங்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்துவார்.<br>• வணிகமொன்றில் அகச்சூழலில் இனங்காணப்பட்ட பலவீனங்களுக்கான தீர்வுகளை முன்மொழிவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.3 வணிக புறச் சூழற் தாக் கங்களின் செயற்பாட்டினை பகுப்பாய்வு செய்வார். | • புறச் சூழலும், அதன் தாக்கங்களும்<br>• புறச் சூழலும் அதற்கான காரணிகளும்<br>• புறச் சூழல் காரணிகளினூடாக உருவாகும் சந்தர்ப்பங்களும் சவால்களும் | • வணிகமொன்றின் புறச்சூழற் காரணிகளை உதாரணங்களுடன் விளக்குவார்.<br>• வணிகமொன்றின் புறச்சூழலில் இனங் காணப்பட்ட வாய்ப்புக்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்துவார்.<br>• வணிகமொன்றில் புறச்சூழலில் இனங் காணப்பட்ட சவால்களுக்கான தீர்வுகளை முன்மொழிவார். | 06 |
| | 3.4 முயற்சியாள ரொருவர் எனும் வகையில் இலங்கையின் பொருளாதாரம் தொடர்பாகத் தேடியறிவார். | • இலங்கையின் பொருளாதார நிலைமை<br>• இலங்கைப் பொருளாதாரத்தின் பிரதான வணிக/ உற்பத்தித்துறைகள்<br>• முதலாம் நிலை<br>• இரண்டாம் நிலை<br>• மூன்றாம் நிலை<br>• இலங்கையில் அருமையாகவுள்ள வளங்கள்<br>• சூழற்போக்குகள் | • இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கிய வணிகத்துறைகளை உதாரணங்களுடன் விளக்குவார்.<br>• வணிகத்தின் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தக்கூடிய இலங்கையில் அருமையாகக் காணப்படும் வளங்களை உதாரணங்களுடன் விளக்குவார்.<br>• வணிகரொருவர் எனும் வகையில் வணிகச் சூழல் போக்குகள் தொடர்பாகக் கவனத்திற் கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை கலந்துரையாடுவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 4.0 பொருத்த மான வணிகமொன் றை ஆரம் பிப்பதற்கான முன் ஆயத்தத்தை வெளிப் படுத்திக் காட்டுவார். | 4.1 வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற் கொள்ள வேண் டிய தீர்மானங் களை வெளிப் படுத்துவார். | • வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான தீர்மானங்கள்<br>• வணிகத்தில் முழுமையான அர்ப்பணிப்புடன் ஈடுபடுதல்.<br>• வணிகத்தினால் மேற்கொள்ளப்படும் பொருள் அல்லது சேவை<br>• சந்தை<br>• போட்டித்தன்மை<br>• உழைப்பின் அளவு<br>• மூலதனத்தைத் திரட்டுதல்<br>• தனியொருவராக அல்லது பங்காளர்களைக் கொண்டு ஆரம்பிப்பது<br>• அமைவிடத்தைத் தெரிவு செய்தல் | • நபரொருவர் வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய தீர்மா னங்களைக் கலந்துரையாடுவார்.<br>• தனிநபரொருவர் வணிகமொன்றை ஆரம்பிக்கும் பொழுது மேலெழக்கூடிய பிரச்சினைகளுக்கான தீர்மானங்களை முன்மொழிவார்.<br>• வணிகத்தை ஆரம்பிக்கும் பொழுது ஏற்படும் பிரச்சினைகளுக்கு வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சிறந்த தீர்மானங்களை முன்மொழிவார். | 21<br>04 |
| | 4.2 புதிய வணிக மொன்றை ஆரம்பிக்கும் பொழுது சந்தையில் பிரவேசிக்கக் கூடிய மாற்று முறைகளைத் தேடியறிவார். | • புதிய வணிகமொன்றை ஆரம்பிக்கும்பொழுது சந்தையில் பிரவேசிக்கக் கூடிய மாற்று முறைகள்<br>• நடைமுறையிலுள்ள சந்தையொன்றில் காணப்படும் பொருட்கள் அல்லது சேவை<br>• நடைமுறையிலுள்ள சந்தையொன்றிற்குரிய புதிய பொருட்கள் அல்லது சேவைகள்<br>• புதிய சந்தையொன்றிற்காக நடைமுறையில் இருக்கின்ற பொருட்கள் அல்லது சேவைகள்<br>• புதிய சந்தையொன்றுக்கு புதிய பொருள்கள் அல்லது சேவைகள்<br>• புதிய வணிகமொன்றில் பிரவேசிக்கும் உபாய வழிமுறைகள்<br>• விசேட பொருள் அல்லது சேவை<br>• உற்பத்திப் பொருட்களது வகைகள்<br>• சந்தை இடைவெளி<br>• புத்துருவாக்கம் | • முயற்சியாளரொருவர் வணிகமொன்றை ஆரம்பிக்கும் பொழுது சந்தையில் பிரவேசிக்கக் கூடிய பல்வேறு முறைகளை சுட்டிக்காட்டுவார்.<br>• முயற்சியாளரொருவருக்கு சந்தையில் பிரவேசிக்கக்கூடிய மாற்று சந்தர்ப்பங் களின் அனுகூலங்களையும், வரையறை களையும் கலந்துரையாடுவார்.<br>• புதிய வணிகமொன்றை ஆரம்பிக்கும் பொழுது சந்தையில் பிரவேசிப்பதற்காக முயற்சியாளரொருவர் மேற்கொள்ளக் கூடிய உபாய வழிமுறைகளை விளக்குவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.3 வணிகமொன்றிற்காக வணிக எண்ணம் ஒன்றைத் தெரிவு செய்வார். | • வணிக எண்ணமொன்றினைத் தெரிவு செய்தல்<br>• ‘வணிக எண்ணங்களின்’ எண்ணக்கரு<br>• சிறந்த வணிக எண்ணமொன்றின் முக்கியத்துவம்<br>• வணிக எண்ணங்களின் மூலங்கள் | • சிறந்த வணிக எண்ணங்களை உதாரணங்களுடன் விளக்குவார்.<br>• முயற்சியாளரொருவருக்கு சிறந்த வணிக எண்ணமொன்றின் முக்கியத்துவத்தை காரணங்களுடன் விளக்குவார்.<br>• வணிக எண்ணத்தை தோற்றுவிக்கக்கூடிய மூலங்களுக்கான உதாரணங்களை சுட்டிக் காட்டுவார். | 05 |
| | 4.4 வணிக வாய்ப்பொன்றிற்கான பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவார். | • வணிக எண்ணத்தை வணிக வாய்ப்பொன்றாகும் வகையில் மாற்றிக் கொள்ளல்<br>• வணிக வாய்ப்பை அறிமுகப்படுத்தல்<br>• வணிக வாய்ப்பிற்கும், வணிக எண்ணத்திற்குமிடையேயான வேறுபாடுகள்<br>• சிறந்த வணிக வாய்ப்பொன்றின் பண்புகள்<br>• சிறந்த வணிக வாய்ப்பொன்றைத் தெரிவு செய்தல்<br>• தெரிவு செய்த வணிக எண்ணத்திற்காக சட்டரீதியான பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்ளல் | • வணிக எண்ணத்திற்கும் வணிக வாய்ப்பிற்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளை விளக்குவார்.<br>• சிறந்த வணிக வாய்ப்பினை மதிப்பீடு செய்வதற்காகப் பயன்படுத்தக் கூடிய நியதிகளை சுட்டிக்காட்டுவார்.<br>• புதிய உற்பத்திப் பொருளுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளை சுட்டிக்காட்டுவார். | 10 |
| | | | | 90 |

# கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள்

**தேர்ச்சி 1.0** : முயற்சியாண்மையினையும் அதன் முக்கியத்துவத்தினையும் அறிந்து முயற்சியாளரொருவராவதற்கான விருப்பத்தினை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : முயற்சியாண்மை எண்ணக்கருவைப் பகுப்பாய்வு செய்வார்.

**பாடவேளைகள்** : 09

**கற்றல் பேறு** :

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாட அலகு முடிவடைந்தன் பின்னர் மாணவர்களுக்குப் பின்வரும் கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.


- இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்தினை மாணவன் கற்றபின் முயற்சியாண்மை தொடர்பான சுயமான கருத்தினை விளக்குவதற்கும்
- முயற்சியாண்மை எண்ணக்கருவுடன் இணைந்த அடிப்படை பதங்களை விரிவாக விளக்குவதற்கும்
    - ஆக்கபூர்வமான தன்மையினை விளக்குதல்.
    - புத்துருவாக்கத் தன்மையினை அறிமுகப்படுத்துதல்.
    - இடர்களை ஏற்றுக்கொள்ளல் தொடர்பாக தனது சுயமான கருத்தினை வெளிப்படுத்துதல்.
- ஏனைய உற்பத்தி வளங்களுடன் ஒப்பிடுமிடத்து முயற்சியாண்மையின் விசேட தன்மையினைக் கலந்துரையாடுவதற்குமான கற்றல்பேறுகளைப் பெற்றுக் கொள்வர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :**

இத்தேர்ச்சி மட்டத்திற்கு அமைய பாடத்திட்டத்தில் காணப்படும் பாட உள்ளடக்கத்தையும் அதனுடன் தொடர்புடைய பாட நூலில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற பாடவிடயங்கள் தொடர்பாகவும் தெளிவான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளவும். அதனுடன் பின்வரும் ஆலோசனைகள் மீதும் கவனஞ் செலுத்தவும்.

- முயற்சியாண்மைப் பரம்பலைச் சுருக்கமாக தெளிவுபடுத்தி முயற்சியாண்மை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பல்வேறு கொள்கைகளை முன்வைக்கவும். இங்கு முயற்சியாண்மை தொடர்பான நவீன கருத்துக்களை முன்வைத்து அதனை விமர்சிக்கவும்.
- இணைப்பு 1.1.1 இல் குறிப்பிடப்படும் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்தச் செய்யவும்.
- இங்கு மாணவர்களும் ஆசிரியரும் அறிந்த முயற்சியாளரொருவரை உதாரணமாகக் கொண்டு அவரின் உற்பத்திகளது தன்மை, புதிய உற்பத்திகளின் வகைகள், வணிகத்தில் ஏற்பட்டுள்ள விருத்தி என்பவைகள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள பாட உள்ளடக்க விடயங்கள் மேலெழுமாறு கலந்துரையாடலொன்றை கட்டியெழுப்புங்கள்
- சந்தர்ப்பம் கிடைக்குமாயின் வெற்றிகரமான முயற்சியாளரொருவரை அழைத்து வந்து அவர் இது வரையில் கடந்து வந்துள்ள பயணம் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவும்.
- முயற்சியாண்மை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள கருத்துக்களை விளக்கும் போது அக்கருத்துக்களுக்கு அடிப்படையாக அமைந்த விடயங்களை உறுதிப்படுத்தவும். பின்னர் மாணவர்கள் அறிந்துள்ள முயற்சியாளர்களைக் கேட்டறிந்து அவர்களது வணிக நடவடிக்கைகளின் தன்மை, புதிய உற்பத்திகள், நிகழ்கால வெற்றிகள் என்பவை தொடர்பாகக் கலந்துரையாடல் மேற்கொள்ளவும்.

- சிற்றளவு வணிகங்களை நடாத்திச் செல்லப்படும் முயற்சியாளர்களும் சிற்றளவு வணிகங்களாக ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் பாரியளவாக விருத்தியடைந்துள்ள முயற்சியாளர்களும் தேசிய ரீதியில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற முயறசியாளர்களும் இருக்கின்றனர் எனவும் குறிப்பிட்டு அவர்களது புதிய உற்பத்திகளை மையமாகக் கொண்டு கலந்துரையாடலை வளமூட்டச் செய்யவும்.
- முயற்சியாண்மை எண்ணக்கருவுடன் இணைந்த அடிப்படைப் பதங்கள் தொடர்பான பாடத்தில் பிரவேசிப்பதற்கு பின்வரும் 9 புள்ளிகளை இணைக்கும் செயற்பாட்டை முன்வைக்கவும்.



- மேற்காட்டிய புள்ளிகள் 09ஐ கடதாசியில் எழுதுவதற்கு சந்தர்ப்பம் வழங்கி அதனை நான்கு கோடுகளை மட்டும் பயன்படுத்தி குறுகிய காலத்தினுள் இரு வினாடிகள் மட்டும் பேனாவை உயர்த்தாது இணைப்பதற்கு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கவும். இதனை வெற்றிகரமாக முடித்த மாணவரை முன்னால் அழைத்து கரும்பலகையிலுல் 9 புள்ளிகளையும் இணைத்த முறையினை செய்துகாட்டச் செய்யவும்.
- ஆக்கபூர்வமான வகையில் சிந்திப்பதன் மூலம் மேற்காட்டிய செயற்பாட்டினைச் சரியாகச் செய்ய முடியும் எனக் கூறுங்கள். பின்னர் முயற்சியாண்மையுடன் இணைந்த பிரதான எண்ணக்கருக்களான ஆக்கபூர்வமான தன்மை புத்துருவாக்கம், இடர்களைப் பொறுப்பேற்றல் என்பனவற்றை அறிமுகப்படுத்தவும். ஒவ்வொரு எண்ணக்கருக்களுக்கும் இடையில் காணப்படுகின்ற உள்ளகத் தொடர்பினை சுட்டிக்காட்டவும். ஆக்கபூர்வமான தன்மையினை விளக்கும் பொழுது ஆக்கபூர்வமான தன்மைக்குத் தடையாக அமையும் காரணிகள் தொடர்பாகவும் ஆக்கபூர்வமான தன்மையை விருத்தி செய்து கொள்ளக் கூடியமுறை தொடர்பாகவும் உதாரணங்களை முன்வைக்கச் செய்யவும். புத்தருவாக்கத்திற்குத் தேவையான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி போன்ற வளங்கள் காணப்பட்டாலும் முயற்சியாளர்களின் பங்களிப்பின்றி வெளியீடுகள் இடம்பெறாது என்பதனை சுட்டிக்காட்டவும். இதற்கமைய முயற்சியாளர்களின் முக்கியத்துவத்தினை உறுதிப்படுத்தச் செய்யவும்.
- இரு தேர்வு தன்மை கொண்ட 10 வினாக்களை தயாரித்து மாணவர்களைப் பயிற்சியில் ஈடுபடுத்தவும்.

  உதாரணம் :
  1. உற்பத்திக்கான வளங்களில் மிக முக்கியமான வளமாக இருப்பது முயற்சியாண்மையாகும். (உண்மை /பொய் )
  2. முயற்சியாண்மையானது தனிநபர்களினது உயர்ந்த ஆளுமைப் பண்பாகும் (உண்மை /பொய்)
  3. முயற்சியாண்மையானது நபர்களினுள் அண்மைக் காலத்திலிருந்தே விருத்தி அடைந்துள்ளது. (உண்மை /பொய்)
- பகுதி A யில் காணப்படும் பதங்களுக்குப் பொருத்தமான உள்ளீடுகளை பகுதி Bயிலிருந்து தெரிவு செய்து அதன் இலக்கங்களை இடைவெளிகளின் மேல் எழுதவும்.

| | | | |
|---|---|---|---|
| நிலம் | .................... | 1. | கணக்காளர் |
| | | 2. | கருவிகளும், இயந்திரங்களும் |
| | | 3. | புத்துருவாக்கங்களை உருவாக்கல் |
| உழைப்பு | .................... | 4. | மூலப்பொருட்கள் |
| | | 5. | மாற்றமொன்றை ஏற்படுத்துதல் |
| | | 6. | நீர் |
| மூலதனம் | ..................... | 7. | பெருந்தெரு |
| | | 8. | அதிபர் |
| முயற்சியாண்மை | ...................... | 9. | மோட்டார் வாகனம் |
| | | 10. | பொருட்கள் /சேவைகளுக்கான பெறுமானங் - களைப் பெற்றுக் கொடுத்தல். |

- இலங்கையில் முயற்சியாண்மைக்குரிய பரிசுகளைப் பெற்றுக்கொண்ட முயற்சியாளர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கச் செய்யவும்.

**அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :**

- முயற்சியாண்மை
- ஆக்கபூர்வமான தன்மை
- புத்துருவாக்கம்
- இடர்களை ஏற்றல்
- உற்பத்திக் காரணிகள்

## தரஉள்ளீடு

- தரம் 10 பாடநூலில் 1 ஆம் பாட அலகு
- இணைப்பு 1.1.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகள்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- ஆக்கபூர்வமான தன்மை, புத்துருவாக்கம், இடர்களைப் பொறுப்பேற்றல் போன்ற அடிப்படைப் பதங்களை உள்ளடக்கியவாறு முயற்சியாண்மை எண்ணக்கருவை விபரிக்கச் செய்யவும்.
- முயற்சியாண்மை எண்ணக்கருவுடன் தொடர்புடைய பின்வரும் அடிப்படைப் பதங்களின் கருத்தினை எளிமையான முறையில் விபரிக்கவும்.
  - i ஆக்கபூர்வமான தன்மை
  - i புத்துருவாக்கம்
  - iii இடர்களைப் பொறுப்பேற்றல்
- நிலம், உழைப்பு, மூலதனம் போன்ற வளங்களைவிட முயற்சியாண்மை எண்ணக்கருவானது மாற்றமடைகின்ற முறையினையும் அவ்வளங்களை உற்பத்திக்கு பயன்படுத்துவதற்கு முயற்சியாண்மை தேவை என்பதையும் உறுதிப்படுத்தவும்.

பிறசில் கடதாசி அட்டையொன்றின் அல்லது டிமை கடதாசியொன்றின் தனியாள் ஒருவரது படத்தினை வரைந்து அதன் பின்னரும் உறுப்புக்களைப் பெயரிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. | கண் | 7. | வாய் |
| 2. | மூளை | 8. | கைகள் |
| 3. | காது | 9. | விரல்கள் |
| 4. | மூக்கு | 10. | பாதம் |
| 5. | கழுத்து | 11. | பாதச் சுவடுகள் |
| 6. | இருதயம் | 12. | முதுகெலும்பு |

இப்படத்தினை வகுப்பறையில் முன்வைத்து, படத்திலுள்ள ஒவ்வொரு உறுப்புக்களும் தனியாள் ஒருவருக்கு ஏன் முக்கியத்துவமானது என்தனை மாணவர்களிடம் வினாவவும். மாணவர்களது துலங்கல்களைக் கரும்பலகை அல்லது வெண்பலகையில் குறித்துக் கொள்ளவும். இறுதியாக, கொடுக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்புக்களும் முயற்சியாளர் ஒருவருக்கு எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தனை என்பது பற்றிய பின்வரும் தகவல்களின் அடிப்படையில் கலந்துரையாடலொன்றை நடாத்தவும்.

சாதாரண மனிதன் ஒருவனைவிட முயற்சியாளர் விசேட பண்புகளை உடையவர் எனும் வகையில் முக்கியத்துவத்தினை அழுத்தமாக்கவும்.

| | | |
|---|---|---|
| 1. | கண் | - சந்தர்ப்பங்களைக் காண்பதற்கும் நோக்கு ஒன்றினை ஏற்படுத்துவதற்கும். |
| 2. | மூளை | - ஆக்க ரீதியான எண்ணக்கருங்களை உருவாவதற்கு |
| 3. | காது | - அறிவு மற்றும் அனுபவங்களுடன் அவற்றினது அறிவுரையினைச் செவிமடுப்பதற்கு |
| 4. | மூக்கு | - மாற்றங்களையும் வாய்ப்புக்களையும் நிலைநாட்டுவதற்கும் உணர்த்துவதற்கும். |
| 5. | கழுத்து | - இடர்களை முறியடிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும். |
| 6. | இருதயம் | - இலக்கு அடையப்படும் போது பெருமையடைவதற்கான பொறுப்புணர்வு மற்றும் விடாமுயற்சிகளுக்கு. |
| 7. | வாய் | - வினைத்திறனுடைய தொடர்புகளுக்கு. |
| 8. | கைகள் | - உங்களது வெற்றிகளைத் தீர்மானிப்பதற்குரிய குழு அங்கத்தவர்களைத் தாங்கிக் கொள்வதற்கு. |
| 9. | விரல்கள் | - ஏதேனும் தவறுகள் அல்லது தோல்விகளிலிருந்து கற்றல் சந்தர்ப்பங்களைக் கணக்கிடுவதற்கு. |
| 10. | பாதம் | - நீங்கள் எதிர்கொள்ளக்கூடிய பண ரீதியான தடைகள் மற்றும் இடையூறுகளைத் தாண்டுவதற்கு. |
| 11. | பாதச் சுவடுகள் | - முன்னோக்கி அசைவதற்கும் தீரச் செயல்களுக்குமான நடைபாதைகளுக்கு. |
| 12. | முதுகெலும்பு | - ஒருவர் நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்வதற்கான நம்பிக்கைகளுக்காக |

**தேர்ச்சி 1.0** : முயற்சியாண்மையினையும் அதன் முக்கியத்துவத்தினையும் அறிந்து முயற்சியாளரொருவராவதற்கான விருப்பத்தினை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : முயற்சியாண்மைக்கும் வணிகத்திற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பினை தேடிப்பார்ப்பார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றல் பேறு** :

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்தினைக் கற்றபின் மாணவர்களுக்குப் பின்வரும் கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- வணிகங்களின் தன்மையினைக் கலந்துரையாடுவதற்கும்
- முயற்சியாளருக்கும் வணிகருக்கும் இடையே காணப்படும் ஒத்த தன்மைகளை முன்வைப்பதற்கும்
- முயற்சியாளருக்கும் வணிகருக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளை முன்வைப்பதற்கும்
- முயற்சியாளர்களின் வகைகளை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துவதற்குமாக கற்றல் பேறுகளைப் பெறுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடத்திட்டத்திலுள்ள பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் இணைந்த பாட விடயங்கள் தொடர்பிலும் சிறந்த தெளிவினைப் பெற்றுக் கொள்ளவும். பின்னர் பின்வரும் ஆலோசனை தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.

- வணிகம் என்றால் யாது என்பதை வினவி சிந்தனைக் கிளறல் முறை மூலம் அவர்களைத் துலங்கச் செய்யவும் (5 நிமிடங்கள் மட்டும் வழங்குவது போதுமானது)
- மாணவர்களின் துலங்கல்களைக் கவனத்திற் கொண்டு வணிக எண்ணக்கருக்கள் வணிகங்களின் பண்புகள் என்பன தொடர்பாக அறிமுகமொன்றைச் செய்யவும்.
- வணிகருக்கும், முயற்சியாளருக்கும் இடையிலான வேறுபாடுகளை விபரிக்கும் போது இணைப்பு 1.2.1இல் உள்ளடக்கப்பட்டுள்ள பொதுக் கலந்துரையாடலை துணையாகக் கொள்ளவும். இங்கு ஊடகவியலாளர், வணிகர், முயற்சியாளர் எனும் மூன்று பாத்திரங்களுக்கு மூன்று மாணவர்களைத் தெரிவு செய்து பாத்திரமேற்று நடித்தல் மூலம் கலந்துரையாடலை வகுப்பில் முன்வைக்கச் செய்ய முடியும். அதன் பின்னர், முயற்சியாளர், வணிகர் இரு பாத்திரங்களினதும் வேற்றுமைகளையும் ஒற்றுமைகளையும் வெளிப்படுத்தச் செய்யவும்.
- வணிக முயற்சியாளர்கள், சமூக முயற்சியாளர்கள், உள்ளக முயற்சியாளர்கள் என்பவற்றிற்கு உதாரணங்களை முன்வைக்கவும்.
- மாணவர்கள் அறிந்த வணிகரொருவர் அல்லது முயற்சியாளரொருவர் தொடர்பாக பின்வரும் தகவல்களைச் சேகரித்து முன்வைக்கச் செய்வதற்கு ஆலோசனை வழங்கவும்.
- முயற்சியாளர்கள் / வணிகர்கள் ஐவரை இனங்காணச் செய்யவும்.
- அவர்களது வணிகங்களின் பெயர்களையும் அவர்கள் வணிகர்களா அல்லது முயற்சியாளர்களா என்பதையும் உரிய காரணங்களுடன் தீர்மானிக்கவும். இதற்காகப் பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தவும்.

பின்வரும் நிரலில் குறிப்பிடப்பட்ட கூற்றுக்களை மாணவர்களுக்கு முன்வைத்து ஒவ்வொரு கூற்றிலும் குறிப்பிடப்படுபவர் வணிகரா அல்லது முயற்சியாளரா என்பதைத் தீர்மானித்து உரிய கூற்றின் முன்னுள்ள இடத்தில் "√"அடையாளமிட ஆலோசனை வழங்கவும். பின்னர் அந்நபரை முயற்சியாளரொருவராக கவனத்திற் கொண்டமைக்குமான அல்லது கொள்ளாமைக்கான காரணங்களைக் கலந்துரையாடவும்.

| வணிகத்தின் பெயர் | உரிமையாளர் வணிகரொவரா முயற்சியாளரொருவரா | அவ்வாறு தீர்மானிப்பதற்கான காரணங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5 | | |
| 6. | | |

பின்வரும் நிரலில் குறிப்பிடப்பட்ட கூற்றுக்களை மாணவர்களுக்கு முன்வைத்து ஒவ்வொரு கூற்றிலும் குறிப்பிடப்படுபவர் வணிகரா அல்லது முயற்சியாளரா என்பதைத் தீர்மானித்து உரிய கூற்றின் முன்னுள்ள இடத்தில் "√"அடையாளமிட ஆலோசனை வழங்கவும். பின்னர் அந்நபரை முயற்சியாளரொருவராக கவனத்திற் கொண்டமைக்கான அல்லது கொள்ளாமைக்கான காரணங்களைக் கலந்துரையாடவும்.

| | | வணிகர் | முயற்சியாளர் |
|---|---|---|---|
| 01. | நிஹால் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்குத் துலங்கலை வெளிப்படுத்தி அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வார். | | |
| 02. | ஆதவனின் வணிகம் அன்று போல் இன்றும் காணப்படுகிறது. | | |
| 03. | மூடப்படக்கூடிய நிலையிலிருந்து பாடசாலையை அதிபர் சுதன் பிரசித்தி பெற்ற பாடசாலையாக மாற்றினார். | | |
| 04. | பில்கேட் கணினி வணிகத்துறையின் பிரபல்யம் பெற்ற வித்தகராவார். | | |
| 05. | நறுமணப் பொருட்கள், பூச்சு வகைகள் என்பவற்றை விற்பனை செய்யும் சில்லறை வியாபாரத்தில் ஈடுபடும் ராஜாவைத் தனது பொருட்களை வீட்டுக்கு வீடு கொண்டு சென்று விற்பனை செய்யும் வேலைத் திட்டத்தின் மூலம் மிகச் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொண்டார். | | |
| 06. | மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் ஜயசேன அவனது வணிக நிலையத்திற்கு அருகில் ஆரம்பிக்கவிருக்கும் அதே போன்ற வணிகத்திற்குத் தொடர்ந்து தடைகளை ஏற்படுத்துகின்றார். | | |

| | | | |
|---|---|---|---|
| 07. | ரூபனுக்கு தான் பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாதிருந்தமையால் தனது வணிகத்தை மூடினார். | | |
| 08. | வினைத்திறனற்றுக் காணப்பட்ட அரச வைத்தியாசலையொன்று திறமையான சுகாதார சேவையை வழங்கக் கூடிய வைத்திய நிலையமாக மாற்றுவதற்கு அதன் புதிய பணிபபாளர் முற்பட்டு வெற்றி அடைந்துள்ளார். | | |
| 09. | ஜெயசேகரனின் முச்சக்கர வண்டிகளில் சில நகரத்தில் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. | | |
| 10. | சிவராமன் தனது விவசாய நடவடிக்கைகளுக்காக இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி உயர் விளைச்சலினைப் பெற்றுக் கொண்டார். | | |

**அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :**

- தேவைகளும் விருப்பங்களும்
- வணிகம்
- வணிகமும் முயற்சியாளனும்.
- வணிக முயற்சியாளர்கள்
- சமூக முயற்சியாளர்கள்
- உள்ளக முயற்சியாளர்கள்

## தரஉள்ளீடு

- தரம் 10 பாடநூலில் இரண்டாம் அலகு
- இணைப்பு 1,2,3 இற்குரிய ஊடகக் கலந்துரையாடலின் பிரதிகள் மூன்று.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- வணிகர்களில் காணப்படும் பண்புகளை உள்ளடக்கியவாறு வணிக எண்ணக்கருவினை தெளிவுபடுத்துவார்.
- வணிகர், முயற்சியாளர் என்போருக்கிடையே காணப்படும் ஒத்த பண்புகளை முன்வைப்பார்.
- முயற்சியாளர், வணிகர் ஆகிய இரு சாராரினதும் வேறுபட்ட பண்புகளை ஒப்பீட்டு ரீதியாகக் காட்டுவார்.
- வணிக முயற்சியாளர்கள், சமூக முயற்சியாளர்கள், உள்ளக முயற்சியாளர்கள் என்போர்களுக்கு ஒவ்வொரு உதாரணம் வீதம் குறிப்பிட்டுக் காட்டுவார்.

இணைப்பு 1.2.3

" Business" எனும் தொலைக்காட்சி ஊடகக் கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தில் ஊடகவியலாளர் ஒருவர் தற்பொழுது வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரசித்தி பெற்ற இரு நபர்களுடன் மேற்கொண்ட நேர்காணல் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| ஊடகவியலாளர் | : | உங்களது வணிக நடவடிக்கைகளைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுங்கள் |
| சந்திரன் | : | எனது அப்பா நடாத்திச் சென்ற வணிகத்தை நானும் நடாத்திச் செல்கிறேன். நான் அதன் மூலம் திருப்தியடைகிறேன். முன்னர் எனது அப்பா இப்பிரசேத்தில் பிரசித்தி பெற்ற வணிகராக விளங்கினார். |
| விஸ்வா | : | இந்த வணிகம் எனது தாத்தாவிடமிருந்து அப்பாவுக்கு கிடைக்கப் பெற்றதாகும். இருவரும் இரும்பு, நாகம் ஆகியவற்றினைப் பயன்படுத்தி உபகரணங்களைச் செய்யும் தொழிற்சாலையொன்றை நடாத்தி வந்தனர். நான் இன்று வீட்டுக்கும் விவசாய நிலங்களுக்கும் தேவையான கூடுதலான உபகரணங்கள் உற்பத்தி செய்து சந்தைக்கு வழங்குகிறேன். |
| ஊடகவியலாளர் | : | இப்பொழுது இப்பிரதேசத்தில் புதிய வணிகங்கள் அதிகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன அல்லவா? அவை தொடர்பாக உங்களது கருத்துரை யாது? |
| சந்திரன் | : | இந்நிலைமை ஒரு பிரச்சினை தான். ஆயினும் எமது இடத்திற்குப் பழக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் இருக்கின்றார்கள் அல்லவா. அவர்கள் எம்மோடுதான் தொடர்ந்தும் கொடுக்கல் வாங்கல்கள் செய்கிறார்கள். |
| விஸ்வா | : | இந்நிலைமை ஆரோக்கியமானதே. இப்பிரதேசத்திற்கு வரும் வாடிக்கையாளர்களின் தொகை கூடும்பொழுது எனது வணிகத்திற்கும் அவர்கள் வருவார்கள். அவர்களை ஈர்த்துக் கொள்வதற்கு எனக்குத் தெரிந்திருக்க வேண்டும். |
| ஊடகவியலாளர் | : | உங்களது எதிர்காலத் திட்டம் என்ன? |
| சந்திரன் | : | வணிகத்தை உள்ளவாறே நடாத்திச் செல்கிறேன். பெரிய மாற்றங்களை மேற்கொண்டால் என்ன நடைபெறும் என்பதை எதிர்வு கூறமுடியாதுள்ளது. எனக்குப் பின்னால் எனது பிள்ளைகள் இவ்வணிகத்தை விரிவாக்கிக் கொண்டு செல்வார்கள். |
| விஸ்வா | : | இவ்விடத்திலே தான் நிலைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை. நாட்டு நிலைமைகளை அவதானித்து வணிகத்தை அதற்கமைய விரிவாக்கிச் செல்வதற்கான வேலைத் திட்டமொனறு என்னிடம் இருக்கின்றது. |

ஊடகவியலாளர் : முன்னரைப் போல் அல்ல. இப்போது வெளிநாடுகளுடன் மேற்கொள்கின்ற கொடுக்கல் வாங்கல்களின் அளவு அதிகரித்துள்ளது. இந்நிலைமை தொடர்பாக நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

சரிந்திரன் : வெளிநாட்டுப் பொருட்கள் பெயரளவில் மட்டுமே. இவற்றைவிடச் சிறந்தவைகள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. விலை குறைவாயின் நுகர்வோர் எமது உற்பத்திகளையும் வாங்குவார்கள்.

விஸ்வா : உலகத்தில் என்ன நடைபெறுகின்றது என்பதை அவதானித்துக் கொண்டிருக்க வேண்டும். இன்று நுகர்வோர் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். பலவந்தப்படுத்திப் பொருட்களை விற்பனை செய்ய முடியாது. அவர்களுக்குத் தேவையானவைகளை மட்டும் வழங்க நாம் அறிந்திருத்தல் வேண்டும்.

**தேர்ச்சி 1.0** : முயற்சியாண்மையினையும் அதன் முக்கியத்துவத்தினையும் அறிந்து முயற்சியாளரொருவராவதற்கான விருப்பத்தினை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : முயற்சியாளர்களிடம் காணப்படும் விசேட பண்புகளைத் தேடியறிவார்.

**பாடவேளைகள்** : 09

**கற்றல் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்தினைக் கற்றபின் மாணவர்களுக்குப் பின்வரும் கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- வழங்கப்பட்ட பண்புகளில் முயற்சியாளர்களிடம் விசேடமாகக் காணப்படும் பண்புகளை வேறுபடுத்திக் காட்டுவதற்கும்
- முயற்சியாண்மைப் பண்புகளை சுயபண்புகளுடன் ஒப்பிட்டு தன்னிடம் காணப்படும் முயற்சியாண்மைப் பண்புகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்கும்
- வழங்கப்பட்ட முயற்சியாண்மைப் பண்புகளைப் பகுப்பாய்வு செய்வதற்குமான கற்றல் பேறுகளைப் பெறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :**

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடத்திட்டத்தின்படி பாட உள்ளடக்கம் தொடர்பிலும் அதனுடன் இணைந்த பாட விடயங்கள் தொடர்பிலும் சிறந்த தெளிவினைப் பெற்றுக் கொள்ளவும். பின்னர் பின்வரும் ஆலோசனை தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கிற்காக விளையாட்டொன்று முன்மொழியப்பட்டுள்ளது. அவ்விளையாட்டிலும் பாடத்திலும் பிரவேசிப்பதற்கு பின்வரும் "ஜோஹாரி யன்னல் எண்ணக்கருவை" வகுப்பில் முன் வைக்கவும்.

  இதற்காக மாணவர் ஒருவரை வகுப்பின் முன் அழைக்கவும். பின்னர் அவ்விளையாட்டுத் தொடர்பான தகவல்களை ஏனைய மாணவர்களிடமிருந்து கேட்டறியவும். பெறப்படும் தகவல்களுக்கமைய ஜோஹரி விளையாட்டு யன்னலைப் பூரணப்படுத்தவும்.


| | தான் அறிந்த | தான் அறியாத |
|---|---|---|
| மற்றோர் அறிந்த | திறந்த<br>OPEN | இருளடைந்த<br>BLIND |
| மற்றோர் அறியாத | மறைக்கப்பட்ட<br>HIDDEN | அறியாத<br>UNKNOWN |


- "அறியாத" பகுதியில் சிறியதாக இருப்பது மிகவும் முக்கியமானது என்பதை உறுதிப்படுத்தவும். தன்னிடம் காணப்படும் பலங்கள், பலவீனங்களை இனங்காண்பதன் முக்கியத்துவத்தினையும் சுட்டிக்காட்டவும்.
- அதே போன்று பின்வரும் விளையாட்டிற்காக கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை நன்றாக அவதானிக்கச் செய்யவும்.
- விளையாட்டுத் தொடர்பாக கலந்துரையாடலொன்றை மேற்கொள்வதற்காக இரு பாடவேளைகளை ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.
- விளையாட்டை விளையாடியதன் பின்னர் ஒவ்வொரு முயற்சியாண்மையிலும் காணப்படும் பண்புகளை விபரிக்கவும்.

இணைப்பு 1.3.1

**முயற்சியாண்மைப் பண்புகளை இனங்காணும் விளையாட்டுக்கான ஆலோசனைகள்**

- வகுப்பை இரு குழுக்களாகவோ அல்லது அதற்கு மேற்பட்டதாகவோ வகைப்படுத்தவும்.
- குழுக்களுக்கு கழிவுப் பத்தரிகைத்தாள் மூன்று விதம் வழங்கவும்.
- பொருத்தமான இடமொன்றைத் தெரிவு செய்து பின்வரும் வரைபிற்கமைய பெட்டியொன்றை (30, 20, 10 சென்றி மீற்றர்கள் முறையே நீளம் அகலம் உயரம் கொண்டவைகளாக) வைத்து அதற்குப் பின்னால் சமமான இடைவெளி கொண்டதாக (ஒன்று அல்லது இரண்டு எட்டு வரையில்) 1,2,3,4,5,6,7,8 என எல்லைகளை அடையாளப்படுத்தவும்.



- வழங்கப்பட்ட பத்திரிகைத் தாள்களைக் கொண்டு உருண்டைகளைச் செய்வதற்கு ஆலோசனை வழங்கவும்.
- குழுவின் ஒவ்வொரு அங்கத்தவர்களும் வருகை தந்து தான் செய்த பத்திரிகைத் தாள் உருண்டைகளை அடையாளமிடப்பட்ட எல்லைகளிலிருந்து, தாம் விரும்பிய இடத்திலிருந்து பெட்டியினுள் விழுமாறு எறியும்படி ஆலோசனை வழங்கவும்.
- வெற்றிகரமான பதிதலுக்காக விளையாடப்படும் இடங்களுக்குரிய இலக்கங்களானவைப் பெறப்படும் புள்ளிகளாகக் கொள்ளப்படும்.
- விளையாட்டு மூன்று சுற்றுக்களைக் கொண்டது. ஒரு அங்கத்தவருக்கு ஒரு சுற்றில் மூன்று சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்.
- முதலாவது சுற்றில் தன்னிச்சையாகச் விளையாடுவதற்கு இடமளியுங்கள். இரண்டாவது தடவையில் புள்ளிகளைப் பெற்றுக் கொள்வவதனைத் தவிர்ப்பதற்கு ஏனையோர்கள் தந்திரோபாயங்களை மேற்கொள்ள முடியும் எனவும், மூன்றாவது தடவையில் வெற்றியளிக்காத முயற்சிகளுக்காக குறித்த புள்ளிகள் குறைக்கப்படும் எனவும் ஒவ்வொரு தடவைத் தொடக்கத்திலும் அறியச் செய்யுங்கள்.
- ஆசிரியர் முதலில் விளையாட்டை முன்மாதிரியாகச் செய்து காட்டவும். பின்னர் அனைத்துக் குழுக்களுக்கும் முன்மாதிரிப் பயிற்சியினைச் செய்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்கவும்.
- விளையாட்டு நடைபெறும் அதேவேளை பெற்றுக் கொள்ளும் புள்ளிகளை கரும்பலகையில் பதிவு செய்யவும்.
- வழங்கப்பட்ட விளையாட்டை விளையாடும்போது மாணவர்களின் நடத்தைகளை நன்றாக அவதானித்து அவற்றைக் நினைவில் வைத்திருந்து செயற்பாட்டுக் கலந்துரையாடலின் போது அவ்அவதானிப்பினை முயற்சியாண்மைப் பண்புகளுடன் ஒப்பிட்டுக் காட்சிப்படுத்தவும்.
- புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் முறை, மாணவர்களின் நடத்தை, விளையாடும் முறை என்பவற்றைப் பகுப்பாய்வு செய்தலானது இதில் காணப்படும் முக்கிய பகுதியாகும்.
- விளையாட்டில் ஈடுபடும் அதேவேளை மாணவர்களது கண்ணுக்குப் புலப்படக் கூடியவாறு புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். விளையாட்டில் பங்குபற்றாத மாணவர்களை இப்பணியை மேற்கொள்வதற்காக ஈடுபடுத்தலாம்.
- விளையாட்டை மிகவும் போட்டித்தன்மை கொண்டதாக நடாத்திச் செல்வதற்கு முயற்சிக்கவும்.
- ஒவ்வொரு குழுக்களும், அக்குழுக்களிலுள்ள அங்கத்தவர்கள் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளையும் கருத்திற் கொண்டு குறித்த தேர்ச்சி மட்டத்துக்குள் உள்ளடக்கப்பட்ட பாட விடயங்கள் வெளிப்படும் வகையில் முயற்சியாண்மையில் காணப்படும் பண்புகளை தெளிவுபடுத்தச் சந்தர்ப்பம் அளிக்கவும்.

## தேர்ச்சி மட்டத்திற்கமைய பாட இறுதியின் போது:

01. இணைப்பு 1.3.2.இல் உள்ளடக்கிய தனது முயற்சியாண்மையில் காணப்படும் பண்புகளுக்கான மதிப்பீட்டு வினாக்கொத்தொன்றினை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும். (நிழற் பிரதி அல்லது கையால் எழுதிக் கொள்ளச் செய்தல்.) ஒரு சமிக்ஞையின் பின்னர் 5 நிமிடங்களில் விடைகளைப் பெற்றுக் கொள்ளவும். வினாக்கொத்திற்கு விடையளித்தலானது மிகவும் நியாயபூர்வமானதாக சரியான விடையாக “ஆம்” அல்லது “இல்லை” என இருக்க முடியும் எனக் கூறுங்கள்.

02 இணைப்பு 1.3.2 உள்ளடக்கிய ஒவ்வொரு வினாக்களின் மூலம் அளவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற முயற்சியாண்மைப் பண்புகளும் எதிர்பார்ப்புத் துலங்கல்களும் பின்வருமாறு காணப்படும். சில மாணவர்களிடம் அவ்வாறான பண்புகள் காணப்படாதிருப்பின் பயிற்சி மற்றும் அனுபவங்கள் மூலம் அவற்றை மேம்படுத்திக் கொள்ள முடியும் என உறுதிப்படுத்துங்கள்.

| வினா இலக்கம் | இருக்க வேண்டிய விடை | முயற்சியாண்மைப் பண்புகள் |
|---|---|---|
| 1 | ஆம் | தொடர்ச்சியான முயற்சி |
| 2. | ஆம் | ஏற்றுக்கொள்ளும் சக்தி |
| 3. | இல்லை | சுய நம்பிக்கை |
| 4. | ஆம் | தகவல்களைத் தேடியறிதல் |
| 5. | ஆம் | தலைமைத்துவம் |
| 6. | ஆம் | நேர் மனப்பாங்கு |
| 7. | இல்லை | சவால்களைப் பொறுப்பேற்றல் |
| 8. | இல்லை | புத்தாக்கமுடையது. |
| 09. | இல்லை | இடர்களை ஏற்றுக்கொள்ளல் |
| 10. | ஆம் | ஆக்கபூர்வமான தன்மை |
| 11. | இல்லை | நெகிழ்வுத்தன்மை |
| 12. | இல்லை | சிரமமான நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான நாட்டம் |
| 13. | இல்லை | உள்ளகக் கடப்பாட்டு விதிமுறை (தானே |
| 14. | ஆம் | தாக்கப்படுவது தொடர்பான நம்பிக்கை) சூழல் இசைவாக்கமடைதல் |
| 15. | ஆம் | தூர நோக்கு |

### அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :

- முயற்சியாளர்களின் சிறப்பு பண்புகள்.
- முயற்சியார்களின் பொதுவான பண்புகள்.

## தரஉள்ளீடு

- தரம் 10 பாடநூலில் 1ஆம் பாட அலகு
- இணைப்பு 1.3.1 இல் உள்ளடக்கப்பட்ட விளையாட்டு, தேவையான பொருட்கள்.

### கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- மாணவர்களிடம் காணப்படும் முயற்சியாண்மைப் பண்புகளை வெளிப்படுத்துவார்.
- தனிநபர்களிடம் பொதுவாகக் காணப்படும் ஆளுமைப் பண்புகளையும் முயற்சியாண்மைப் பண்புகளையும் வழங்கும் பொழுது அவற்றிலிருந்து முயற்சியாண்மைப் பண்புகளை வேறுபடுத்திக் காட்டுவார்.
- வழங்கப்பட்ட முயற்சியாண்மைப் பண்புகளின் கருத்தினை விபரிப்பார்.

**இணைப்பு 1.3.1**

## முயற்சியாண்மைப் பண்புகளை மதிப்பீட்டு செய்வதற்கான வினாக்கொத்து

01. எத்தகைய தடைகள் வந்தபொழுதிலும் எனது நோக்கத்தை நிறைவேற்றுவதினின்றும் பின்னிற்க மாட்டேன். ஆம் / இல்லை

02. எந்தவொன்றையும் பொறுப்பேற்கும் இயலுமை என்னிடம் இருக்கின்றது. ஆம் / இல்லை

03. எனது அதிஉன்னத எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத பொழுது நான் தளர்வடைவேன். ஆம் / இல்லை

04. ஏதேனும் கருமமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் அது தொடர்பாக தகவல்களைத் தேடியறிவேன் ஆம் / இல்லை

05. மற்றோர்களை எனது கருத்துக்களுடன் உடன்படச் செய்ய முடியும். ஆம் / இல்லை

06. நான் முயற்சிக்கும் கருமம் வெற்றியடையும் என நம்பிக்கை கொள்வேன். ஆம் / இல்லை

07. சிரமமான கருமமொன்றை மேற்கொள்வதற்கு நான் முயற்சிக்க மாட்டேன். ஆம் / இல்லை

08. பிரச்சினையொன்றுக்குப் புதுவகையிலான தீர்வொன்றைத் தேடியயறிவதிலும் பார்க்க ஏற்கனவே இருக்கின்ற தீர்வொன்றின் மூலம் திருப்தியடைவேன். ஆம் / இல்லை

09. புதியதொன்றைச் செய்வதன் மூலம் சிரமப்படுவதைவிட தற்போது உள்ளவைகளில் மிகச் சிறந்ததொன்றைச் தெரிவு செய்வது சிறந்தது என நான் கருதுகிறேன். ஆம் / இல்லை

10. தேவைப்படும் சந்தர்ப்பங்களின் போது எனது தீர்மானங்களில் மாற்றம் செய்து கொள்வதற்கு நான் பின்னிற்கமாட்டேன். ஆம் / இல்லை

11. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நான் புதியதொன்றைச் செய்வதில் நாட்டம் காட்டுவதற்கான விருப்பமுடையவனாக இருப்பேன். ஆம் /இல்லை

12. வெற்றியடையும் எனக் கருதுபவைகளை மட்டும் தெரிவு செய்வதில் விருப்பம் கொண்டவனாக நான் இருப்பேன். ஆம் / இல்லை

13. எனது அநேக நடவடிக்கைகள் வெற்றியடைவதற்கு அதிஷ்டமே காரணமென நம்பிக்கை கொள்வேன். ஆம் / இல்லை

14. சூழலில் இடம்பெறும் மாற்றங்கள் தொடர்பாக அடிக்கடி அவதானத்துடன் இருப்பேன். ஆம் / இல்லை

15. எதிர்காலத்தில் எவ்வாறான ஒருவரைப் போல் வர வேண்டும் எனும் தெளிவான இலக்கொன்று என்னிடத்தில் இருக்கின்றது. ஆம் / இல்லை

**தேர்ச்சி 1.0** : முயற்சியாண்மையினையும் அதன் முக்கியத்துவத்தினையும் அறிந்து முயற்சியாளரொருவராவதற்கான விருப்பத்தினை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : முயற்சியாண்மையின் அனுகூலங்களைத் தேடியறிவார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றல் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்தினைக் கற்றபின் மாணவர்களுக்குப் பின்வரும் கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- ஒருவன் முயற்சியாளரொருவராவதனால் அவருக்கு கிடைக்கக்கூடிய விசேடமான அனுகூலங்களைக் கலந்துரையாடுவதற்கும்.
- சிலர் வாழ்வாதாரமொன்றாக தொழிலொன்றில் ஈடுபடாது வணிகமொன்றை மேற்கொள்வதற்கான காரணங்களை முன்வைப்பதற்கும்.
- முயற்சியாளர்கள் தேசிய பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் முறையினைச் சுட்டிக் காட்டுவதற்கும்.
- நபர்கள் முயற்சியாளர்களாவதனாலும், தொழில் செய்பவர்களாவதனாலும் கிடைக்கப்பெறும் அனுகூலங்களை ஒப்பிடுவதற்குமான கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :**

பாடத்திட்டத்தில் இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் இணைந்த பாட விடயங்கள் தொடர்பிலும் சிறந்த தெளிவினைப் பெற்றுக் கொள்ளவும். பின்னர், ஆலோசனை தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்தின் அடிப்படையில் பாடப் பிரவேசத்தின் போது மாணவர்கள் கற்றல் நடைபெறும் வேளையில் எதிர்காலத்தில் யாராக வருவதற்கு நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதனைக் கேட்டறிந்து சிந்தனைக் கிளறலொன்றை மேற்கொள்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்கவும்.
- இதனிடையே தொழிலொன்றில் ஈடுபடுவதற்கான விருப்பத்தினைக் காட்டும் மாணவர்களை ஒரு குழுவாகவும், சுயமான நடவடிக்கையொன்றில் ஈடுபடுவதற்கான நாட்டம் கொண்டவர்களை மற்றொரு குழுவாகவும் வேறுபடுத்தி மாணவர்களின் அத்தெரிவிற்கான காரணங்களை ஒவ்வொரு குழுவைச் சேர்ந்த மாணவர்களிடமும் கேட்டறிந்து விடயங்களை இனங்காணுங்கள்.
- இணைப்பு 1.3.1இல் உள்ளப்பட்டுள்ள ஜாவிதின் வணிகம் தொடர்பான விடய ஆய்வினை மாணவர் குழுக்களுக்கு வழங்கி தேயறிதலில் ஈடுபடுத்தவும்.
- தேடியறிவதற்காக பின்வரும் தலைப்புக்களை குழுக்களுக்கு வழங்கி தகவல்களைச் சேகரிக்கவும்.
  01. வணிகத்தினால் ஜாவித்திற்குக் கிடைக்கும் அனுகூலங்கள்.
  02. வணிகத்தினால் நாட்டிற்குக் கிடைக்கும் அனுகூலங்கள்.
- இவ்விடயங்களைக் கருத்திற் கொண்டு முயற்சியாண்மையினால் கிடைக்கும் அனுகூலங்கள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வழிவகை செய்யவும்.
- அவ்வாறின்றேல், "தொழில் செய்பவரைவிட முயற்சியாளர்ரொருவராக மாறுவதால் கூடிய அனுகூலங்கள் கிடைக்கும்." எனும் தலைப்பினடிப்படையில் தெரிவு செய்த இரு குழுக்களை அதில் ஈடுபடுத்தி விவாதமொன்றை நடத்த முடியும். இதனைத் துணையாகக் கொண்டு பாடவிடயங்களில் மேலும் விளக்கத்தைப் பெற்றுக் கொடுக்கவும்.
- முயற்சியாண்மையினால் தேசிய பொருளாதாரத்திற்குக் கிடைக்கும் அனுகூலங்கள் தொடர்பாக விளக்கும்போது வினாத்தொடுத்தல், விரிவுரை, கலந்துரையாடல் போன்ற முறைகளைப் பின்பற்ற முடியும். இங்கு முயற்சியாளார்கள் வணிகங்களை ஆரம்பித்தல், மற்றும் விரிவுபடுத்தல் மூலம் கிடைக்கும் பயன்கள் தொடர்பாக மாணவர்களிடம் கேட்டறிந்து வினாக்களைத் தொடுப்பதன் மூலம் கலந்துரையாடலை மேற்கொண்டு குறிப்பிட்ட பாடவிடயங்களை வெளிப்படுத்தச் செய்யவும். அவ்வேளையில், உதாரணங்கள் முன்வைக்கப்படுதல் எதிர்பார்க்கப்படுகிறது.

பின்வரும் அட்டவணையில் உள்ளடக்கப்படடுள்ள ஒவ்வொரு கூற்றுக்களும் முயற்சியாளருக்கும் தொழிலாளருக்கு ஏற்றவாறு அமையும் முறையினைக் குறிப்பிடக் காட்டவும். இதனை தனியாகவோ அல்லது குழுச் செயற்பாடொன்றாகவோ ஒப்படைக்க முடியும்.

| கவனத்திற் கொள்ளப்படும் அனுகூலங்களுக்கான நியதிகள் | தொழில் செய்பவர் / முயற்சியாளர் |
|---|---|
| • உழைப்பு தொடர்பான இடர், அச்சம்<br>• வருமானத்தின் போக்கு<br>• தனது சுயதீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதிலுள்ள இயலுமை<br>• தேவைப்படும் கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்<br>• சுயமானதும் சுதந்திரமானதுமான தன்மை<br>• நேர் மனப்பாங்கு, திறமைகளின் மூலம் நன்மைகளைப் பெறுதல்<br>• தனது உழைப்பை ஈடுபடுத்தக்கூடிய காலம் (வயது, நாட்கள்)<br>• ஈடுபட்டிருக்கும் கருமங்கள் ஓரினத் தன்மையானது அல்லது பல்லினத் தன்மை கொண்டது என<br>• பொதுவான வாழ்க்கை மட்டம்<br>• சமூக ரீதியான அங்கீகாரம் | |

இப்பயிற்சியினை மதிப்பீட்டிற்குட்படுத்தி மீள வலியுறுத்தலை மேற்கொள்ளவும்.

**அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :**

- முயற்சியாண்மையினால் தனி நபர்களுக்கு கிடைக்கின்ற நன்மைகள்.

## தர உள்ளீடு

- தரம் 10 பாடநூலில் மூன்றாம் அலகு
- இணைப்பு 1.3.1 இற்கு தேவையான பிரதிகள்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- எவரேனுமொருவர் முயற்சியாளராவதனால் அவருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் ஐந்தைக் குறிப்பிட்டுக் காட்டுவர்.
- தனி நபர்கள் வணிகத்தில் ஈடுபடுவதற்கான ஐந்து காரணங்களை வெளிப்படுத்துவர்.
- முயற்சியாண்மையினால் பொருளாதாரத்திற்குக் கிடைக்கும் அனுகூலங்கள் ஆறினைத் தெளிவுபடுத்துவர்.
- தனி நபரொருவர் தொழில் செய்வோராவதனாலும் முயற்சியாளராவதனாலும் கிடைக்கும் அனுகூலங்களை ஒப்பிட்டுக்காட்டும் அட்டவணையொன்றைத் தயாரிப்பார்.

இணைப்பு 1.3.1

## ஐங்கரனது வணிகம்

ஐங்கரனது வயது நாற்பதாகும். அவர் வவுனியாவில் வசித்து வருகின்றார். வவுனியாவிற்கு வந்த வேளையில் அவர் இளைஞராக இருந்தார். அவரது தந்தை சிற்றுண்டிச்சாலையொன்றில் சமையற்காரராகச் சேவையாற்றினார். பாடசாலையை விட்டு விலகியவுடன் தொழில்நுட்ப நிறுவனமொன்றில் சேர்ந்து இரு வருட ஆடை தைத்தல் பாடநெறியைக் கற்றார். பாடநெறியைப் பூர்த்தி செய்ததன் பின்னர் வவுனியாப் பிரதேசத்திலுள்ள ஆடை தைக்கும் நிறுவனமொன்றில் இணைந்து கொண்டார்.

அந்நிறுவனத்தில் இரண்டு வருடங்கள் சேவை புரிந்து அனுபவங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவர் தானே ஒரு வியாபாரத்தை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்தார். வணிகத்திற்காக தனது சேமிப்பிலிருந்த பணத்தையும் வணிக வங்கியொன்றிலிருந்து கடனொன்றையும் பெற்றும் அதில் ஈடுபடுத்தினார். தனது நடவடிக்கைகளுக்கு இலகுவாக அமையும் வகையில் வீட்டுக்குப் பக்கத்தே உள்ள வியாபார நிலையமொன்றில் ஒரு அறையை ஐங்கரன் வாடகைக்கு எடுத்துக் கொண்டார். அவர் நான்கு தையல் இயந்திரங்களையும், துணிகளையும் கொள்வனவு செய்ததுடன், துணிகளை வெட்டுதல் மற்றும் தைத்தல் என்பவற்றிற்காக திறமையான நான்கு ஊழியர்களையும் இணைத்துக் கொண்டார்.

ஆரம்பத்தில் சட்டை, காற்சட்டை, மேற்சட்டை என்பவற்றை உற்பத்தி செய்தார். நுகர்வோர் தன்னிடம் வந்து அவற்றைக் கொள்வனவு செய்வதற்காக தமது நிறுவனத்திலேயே அந்த உற்பத்திகளை காட்சிப்படுத்தி வைத்தார். பின்னர் சீருடைகளை வழங்குவதற்கான கட்டளைகள் ஐங்கரனுக்குக் கிடைக்கப்பெற்றன. இக்கட்டளைகளை பூரணப்படுத்துவதற்காக முழு நேர ஊழியர்கள் ஐவரும் பகுதி நேர ஊழியர்கள் இருவரும் தேவைப்பட்டனர். மேலும் மேலதிகமாக மூன்று தையல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான தேவையும் ஏற்பட்டது. ஐங்கரனுக்கு அக்கட்டளைகளைப் பூரணப்படுத்துவதற்கு முடிந்ததுடன் அவரது உற்பத்தி தொடர்பில் நுகர்வோரது திருப்தியும் கிடைக்கப்பெற்றது.

அவரது வணிகம் விரிவடைந்தமையால் பாரிய இடவசதியும் தேவைப்பட்டது. எனவே அவர் இதற்காக நகரத்தில் பிரசித்தி பெற்ற இடத்தில் காணப்பட்ட பாரிய கட்டடமொன்றைக் கொள்வனவு செய்தார். இரு நிறுவனங்களுக்கான சீருடைகளைத் தொடர்ந்து அவர் வழங்கி வந்ததுடன் ஏனைய நுகர்வோர்களுக்கான ஆடைகளும் உற்பத்தி செய்யப்பட்டன. இச்சந்தர்ப்பத்தின் போது அவருக்கு வணிகத்தின் பணப் பரிமாற்றம், கொடுக்கல் வாங்கல்களை அறிக்கைப்படுத்துதல் என்பற்றிற்காக கணக்கு இலிகிதர் ஒருவரும், அவரது வணிக நடவடிக்கைகளுக்குத் துணையாக உதவியாளர் ஒருவரையும் இணைத்துக்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

அவரது உற்பத்திகளை உள்நாட்டு நுகர்வோருக்கு மட்டுமின்றி வெளிநாட்டு நுகர்வோருக்கும் பிரபல்யப்படுத்துவதற்காக ஐங்கரன் கொழும்பில் காட்சியறையொன்றை அமைத்தார். இரு காட்சியறைகளின் வேலைகள் பூர்த்தியடைந்த நிலையில் அருகிலுள்ள நாடொன்றிற்கு அவரது உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கப் பெற்றது.

ஐங்கரன் அவரது நுகர்வோருடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டிருந்தார். அவரது நேர்மையின் காரணமாக நுகர்வோர் அவரை நேசிப்பவர்களாக இருந்தனர். அவரது பணியாளர்களும் அவரை நேசிப்பவர்களாக இருந்ததுடன் அவர்கள் பக்கச் சார்பின்றியும் வேலையில் அர்ப்பணிப்புடனும் செயற்படுபவர்களாக இருந்தனர். அவரது பணியாளர்களில்

ஐவர் ஐந்து வருடங்களுக்கும் மேலாக இவ்வணிகத்தில் சேவையாற்றி வருகின்றனர். அவரது ஊழியர்களும் நுகர்வோரும் அவரை “passion” (மாதிரி) எனும் பெயர் கொண்டழைத்தனர். அவர் அப்பெயருக்கு விருப்பம் கொண்டவராக இருந்தமையால் அது அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. ஐங்கரன் அவரது பணியாளர்களுக்குச் சிறந்த சம்பளம் வழங்குகிறார். மேலும், அவர்களுக்காகக் காப்புறுதித் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அவர்களது மாதாந்தச் சம்பளத்திற்கு மேலதிகமாக போக்குவரத்துச் செலவுக்கான கொடுப்பனவொன்றும் வழங்கப்படுகிறது. அவரது பணியாளர்களுக்கு தொழிலில் பதவி உயர்வுகள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**விசேட ஆலோசனைகள்**

மாணவர்களுக்கு முயற்சியாண்மையின் அனுகூலங்கள் தொடர்பாக மேலும் அறியச் செய்வதற்காக வளவாளர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கமைய மாணவர்களை விரிவுரையாளர்களுக்குச் செவிமடுக்கச் செய்து குறித்த பாடவிடயங்கள் வெளிப்படுமாறான செயற்பாடொன்றில் ஈடுபடுத்தப்பட முடியும்.

**தேர்ச்சி 2.0** : சிற்றளவு வணிகமொன்றின் வெற்றிக்கு முயற்சியாளரினால் நிறைவேற்றப்படுகின்ற வகிபாகங்களைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : முயற்சியாண்மைக்கும், சிற்றளவு வணிகங்களுக்கும் இடையில் காணப்படும் தொடர்புகளை அறிந்து கொள்வார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றல் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாட அலகினைக் மாணவன் கற்ற பின்னர் மாணவர்களுக்கு பின்வரும் கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- சிற்றளவு வணிகங்களில் காணப்படும் பண்புகளை தெளிவுபடுத்துவதற்கும்
- இலங்கை போன்ற நாடொன்றிற்கு சிற்றளவு வணிகங்களினால் கிடைக்கப்பெறும் நன்மைகளைச் சுட்டிக்காட்டுவதற்கும்
- சிற்றளவு வணிகங்கள் தோல்வியடைவதற்கு காரணமாயமைகின்ற காரணிகளை இல்லாமல் செய்வதற்கான முன்மொழிவுகளை முன்வைப்பதற்குமான கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

பாடத்திட்டத்தில் இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் இணைந்த பாட விடயங்கள் தொடர்பிலும் சிறந்த தெளிவினைப் பெற்றுக் கொள்ளவும். பின்னர் பின்வரும் ஆலோசனை தொடர்பில் கவனம் செலுத்தவும்.

- பிரதேசத்தில் உள்ள சிற்றளவு வணிக நிறுவனங்களை உதாரணமாக முன்வைத்து அவற்றினது பொதுவான பண்புகள் எவையெனக் கேட்டு மாணவர்களின் சிந்தனையைக் கிளறச் செய்யவும்.
- மாணவர்களின் துலங்கலை கவனத்திற் கொண்டு சிற்றளவு வணிகங்களின் பண்புகள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.
- சிற்றளவு வணிகங்கள் தொடர்பில் நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் கூறிய இரு வரைவிலக்கணங்களை வகுப்பறையில் முன்வைக்கவும்.
- அதன் பின்னர் விரிவுரை மற்றும் கலந்துரையாடல் முறைகளைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட பாடவிடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கான செயற்பாடுகளில் ஈடுபடவும்.
- இயலுமாயின் பிரதேசத்தில் வெற்றிகரமாக செயற்படும் வணிக நிறுவனமொன்றிற்கு மாணவர்களுடன் சுற்றுலாவொன்றை மேற்கொண்டு பின்வரும் விடயங்களுக்குரிய தகவல்களை வெளிப்படுத்திக் கொள்ளவும்.
    - வணிகத்தின் ஆரம்ப வரலாறும் வணிகத்தின் தற்போதைய நிலைமையும்.
    - அவ்வணிகத்தின் பண்புகள்
    - மாணவர்கள் இனங்கண்ட வணிகத்தின் பலங்களும் பலவீனங்களும்
    - வணிகத்தை மேலும் விருத்தி செய்வதற்கான மாணவர்களின் முன்மொழிவுகள்

**தேர்ச்சி மட்டத்துக்கேற்பப் பாட முடிவில் மாணவர்களைப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்த முடியும்.**

- வகுப்பு மாணவர்களைப் பொருத்தமான வகையில் மூன்று குழுக்களாகப் பிரிக்கவும்.
- பின்வரும் தலைப்புக்களை சீட்டிழுப்பின் மூலம் ஒவ்வொரு குழுக்களுக்கும் ஒப்படைக்கவும்.
    - I இலங்கைக்கு சிற்றளவு வணிகங்களின் முக்கியத்துவம்
    - II சிற்றளவு வணிகங்களின் பலங்களும் பலவீனங்களும்.
    - III சிற்றளவு வணிகங்களை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கான முன்மொழிவுகள்

- பின்வரும் நிபந்தனைகளுக்கேற்ப அறிவு அளவிடைப் போட்டியொன்றை நடாத்தவும்.
    - முதலாவது இலக்கம் 01 இன் தலைப்பைப் பெற்ற குழுவிற்கு அவர்களினால் இனங்காணப்பட்ட ஒரு விடையினைச் சொல்வதற்கு சந்தர்ப்பம் வழங்கவும் (நேரம் 30 செக்கன்கள்)
    - அக்குழுவைச் சேர்ந்த ஒருவர் முன்வந்து விடையளித்தால் 10 புள்ளிகள் வழங்கி உரிய நேரத்தினுள் அக்குழு விடையளிக்கத் தவறின் அச்சந்தர்ப்பத்தை ஏனைய குழுக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும். அக்குழுவினர் தரும் விடைக்கு 05 புள்ளிகள் வழங்கவும்.
    - ஏனைய தலைப்புக்களுக்கும் மேற்காட்டிய படிமுறைகளையே பின்பற்றவும்.
    - இவ்வாறு ஒரு தடவைக்கு ஒரு விடை வீதம் பெற்றுக் கொள்ளும் வகையில் ஐந்து சுற்றுக்களாகப் போட்டியை நடாத்தவும்.

- **கற்ற பாடவிடயங்களை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பின்வரும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.**

  ‘‘இலங்கைத் தாயினை ஊக்கப்படுத்தும் சிற்றளவு வணிகங்கள் ‘‘போன்ற கவர்ச்சிகரமான தலைப்பொன்றின் ஊடாக,
    - கட்டுரையொன்றினை உருவாக்குவதற்கு
    - பேச்சொன்றினைப் பேசுவதற்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்கவும்.

      அல்லது
    - வணிகரொருவர் சார்பில் வெளியிடப்படுகின்ற அல்லது பாடசாலை சஞ்சிகையொன்றிற்கு முன்வைக்கப்படும் கடிதம்.
    - பாடசாலை சுவர்ப்பத்திரிகைக்குக் கடிதமொன்றைத் தயாரிக்கவும்.

இத்தேர்ச்சி மட்டத்தின் பாடவிடயங்களை உள்ளடக்கி இருகூற்று வகை வினாக்கள் 10இனைக் கொண்ட பட்டியலொன்றை வகுப்பில் முன்வைத்து அவர்களின் துலங்கல்களைப் பெற்றுக் கொள்ளவும்.

உதாரணம் :

- எந்தவொரு பொருளாதாரத்திலும் மிக முக்கியமான வணிகப் பிரிவாக இருப்பது சிற்றளவு வணிகங்களாகும். (உண்மை /பொய்)

- சிற்றளவு வணிகங்கள் அவை முதலீடு செய்துள்ள மூலதனத்தின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டே அறிமுகப்படுத்தப்படுகின்றன. (உண்மை /பொய்)

- வெற்றிகரமான பெரும்பாலான வணிக முயற்சியாளர்களின் முதலாவது ஆரம்பம் சிற்றளவு வணிகங்களாகும். (உண்மை /பொய்)

- சந்தையொன்றின் இடைவெளி சிற்றளவு வணிகர்களின் பிரவேசத்திற்கான சந்தர்ப்பத்தினைப் பெற்றுக் கொடுக்கும். (உண்மை /பொய்)

- புத்துருவாக்கத்தின் கூடுதலான வீதம் சிற்றளவு வணிகர்களாலே இடம்பெறுகின்றது. (உண்மை /பொய்)

**அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :**

- சிற்றளவு வணிகங்கள்.
- சிற்றளவு வணிகங்களின் பண்புகள்.
- சிற்றளவு வணிகங்களினால் கிடைக்கப்பெறும் நன்மைகள்.
- சிற்றளவு வணிகங்களின் பலவீனங்கள்.

## தர உள்ளீடு

- தரம் 10 பாடநூலில் 4ஆம் அலகு

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- சிற்றளவு வணிகங்களில் காணக்கூடிய 06 பண்புகளை வெளிப்படுத்துவார்.
- சிற்றளவு வணிகங்களினால் இலங்கைக்கு கிடைக்கும் நன்மைகள் 06இனைச் சுட்டிக்காட்டுவார்.
- சிற்றளவு வணிகங்கள் தோல்வியடையக் காரணமாயமையும் காரணிகள் 05இனைக் குறிப்பிட்டுக் காட்டுவார்.
- சிற்றளவு வணிகங்கள் தோல்வியடையச் காரணமாயமையும் காரணிகளை தவிர்த்துக் கொள்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முன்மொழிவார்.

**தேர்ச்சி 2.0** : சிற்றளவு வணிகமொன்றின் வெற்றிக்கு முயற்சியாளர் ஒருவரினால் நிறைவேற்றப்படுகின்ற வகிபாகங்களைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : சிற்றளவு வணிகமொன்றில் முயற்சியாளரொருவரினால் நிறைவேற்றப்படும் முக்கிய பாத்திரங்களைத் தேடியறிவார்.

**காலம்** : 05 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள் :**

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்தினைக் கற்றபின் மாணவர்களுக்குப் பின்வரும் கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- முயற்சியாளரொருவர் வணிக அமைப்பொன்றில் மேற்கொள்கின்ற பிரதான வகிபாகங்களைத் தெளிவுபடுத்துவதற்கும்,
- வணிகமொன்றில் முயற்சியாளரொருவருக்கு வழங்கப்பட்ட வகிபாகத்தின் கருமங்களை குறிப்பிடுவதற்கும்
- முயற்சியாளரின் ஒவ்வொரு வகிபாகமும் வணிகத்தின் வெற்றியில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறையினைக் கலந்துரையாடுவதற்குமான கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :**

பாடத்திட்டத்தில் இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் இணைந்த பாட விடயங்கள் தொடர்பிலும் சிறந்த தெளிவினைப் பெற்றுக் கொள்ளவும். பின்னர் ஆலோசனை தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்தின் முதலாவது பாடத்தில் பிரவேசிப்பதற்கு சிங்கம், பெண், வேட்டைக்காரன் (Lion, Lady, Hunter) விளையாட்டினைப் பயன்படுத்த முடியும். ஒவ்வொறு பாத்திரத்தினூடாகவும் வெவ்வேறுபட்ட பாத்திரங்கள் நடித்துக் காட்டப்படுகின்றன என்பதை இவ்விளையாட்டின் மூலம் மாணவர்களுக்கு எடுத்துக்காட்ட முடியும். (அறிவுறுத்தல்களுக்கு இணைப்பு 2.2.1 பார்க்க)
- பின்வரும் முறையிலமைந்த செயற்பாடொன்றின் மூலம் முகாமையாளர், தலைவர் வகிபாகங்களுக்குரிய கருமங்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களை ஈடுபடுத்தலாம்.
- வகுப்பறையிலுள்ள மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துப் பின்வரும் தலைப்புக்கள் இரண்டையும் இரு குழுக்களுக்கு வழங்கவும்.
  1. அதிபரின் முகாமைத்துவ வகிபாகம் (பாத்திரம்)
  2. அதிபரின் தலைவமைத்துவ வகிபாகம் (பாத்திரம்)

- தனது பாடசாலை அதிபரின் கருமங்களை அறிந்து குழுவிற்கு கிடைத்த தலைப்பிற்குரிய கருமங்களைப் பட்டியற்படுத்துவதற்குக் குழுவிற்கு ஆலோசனை வழங்கவும்.

  மாணவர்கள் இனங்கண்ட தகவல்களை முழு வகுப்பிற்கு ஆக்கரீதியாக முன்வைப்பதற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தவும். குழுக்களின் தேடியறிதல்களை வகுப்பறையில் முன்வைத்த பின்னர் மாணவர்களின் ஆக்கரீதியான கருத்துக்களை கேட்டறியவும்.மாணவர்கள் இனங்கண்ட தகவல்களையும் குறித்த பாட விடயங்களையும் கவனத்திற்கொண்டு பாடத்தைத் தெளிவுபடுத்தவும். தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடங்களின் பின்னர் பின்வரும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.

1. சிற்றளவு வணிகரொருவரின் வணிகத்தில் இடம்பெற்ற செயற்பாட்டுப் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு கருமமும் முயற்சியாளரின் எப்பாத்திரத்துடன் தொடர்புபட்டது என்பதை குறிப்பிட்ட பாத்திரத்திற்குரிய நிரலில் "√" அடையாளமிட்டுக் காட்டுக.

| **வணிகரின் கருமங்கள்** | உரிமையாளர் | முகாமையாளர் | தலைவர் |
|---|---|---|---|
| 1. ஊழியர்கள் இருவருக்கு வேலையைப் பகிரிந்தளித்தல் | | | |
| 2. புதிய பிரிவொன்றை வணிகத்துடன் இணைத்தல் | | | |
| 3. தமக்குரிய விடுமுறைகளை (Leave) எடுக்காது வேலை செய்தவர்களுக்கு ஊக்கவிப்புக் கொடுப்பனவொன்றை வழங்கல் | | | |
| 4. ரூபா 50,000 தொகையினை வணிகத்திலிடல் | | | |
| 5. வெளியக நிறுவனங்களுடன் தொடர்புகளின் வலைப்பின்னலொன்றைக் கட்டியெழுப்புதல். | | | |
| 6. நட்டத்தில் இயங்கும் வணிகப் பகுதியொன்றை மூடிவிடுவதற்குத் தீர்மானமெடுத்தல். | | | |
| 7. தாமதமாகவரும் ஊழியர்களை எச்சரிக்கை செய்தல். | | | |
| 8. விளம்பர வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ளல். | | | |
| 9. வணிகத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் ஊழியர்களுக்கு அறிவுறுத்துதல். | | | |
| 10. ஊழியர்களுக்கு முன்மாதிரியாக செயற்படல். | | | |
| 11. பொருட்கள் வீணாவதைத் தவிர்த்து செயற்படல் | | | |
| 12. சுயாதீனமாகக் கருமங்களை மேற்கொள்வதற்கு ஊழியர்களை ஈடுபடுத்தல். | | | |

2. இலங்கையில் இனங்காணப்பட்ட சிறந்த தலைவரொருவர் தொடர்பில் கலந்துரையாடலை நடாத்தி அவர் சிறந்த தலைவராகக் கவனத்திற் கொள்ளப்படுவதற்கான காரணங்களை வெளிப்படுத்துவதற்காகச் செயற்பாடொன்றில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

இணைப்பு 2.2.1

**அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :**

- முயற்சியாளரின் பிரதான வகிபாகங்கள். (பாத்திரம்)
- முயற்சியாளரின் பிரதான வகிபாகத்திற்குரிய கருமங்கள்.

## தர உள்ளீடு

- தரம் 10 பாடநூலில் 4ஆம் அலகு


## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- முயற்சியாளரொருவரின் சிற்றளவு வணிமொன்றில் நிறைவேற்றப்படும் முக்கிய வகிபாகங்களைப் பெயரிட்டு அவ்வகிபாகங்களுக்கு இடையிலான நெருங்கிய தொடர்பினை விளக்குதல்.
- சிற்றளவு வணிகமொன்றின் முயற்சியாளரொருவரின் வழங்கப்பட்ட வகிபாகத்தினை விளக்குதல்.
- வணிகமொன்றில் முயற்சியாண்மை வகிபாகமானது வணிகத்தின் வெற்றிக்குத் துணையாக அமையும் முறையினை வெளிப்படுத்தல்.

**பாத்திரமேற்று நடித்தல்**

- பாத்திரங்கள்
  1. சிங்கம்
  2. வேட்டைக்காரன்
  3. பெண்
- பாத்திரங்களின் பண்புகள்
  1. சிங்கம் வேட்டைக்காரனுக்குப் பயம்
  2. வேட்டைக்காரன் பெண்ணுக்குப் பயம்
  3. பெண் சிங்கத்திற்குப் பயம்

- நடுவராக ஆசிரியர் செயற்படுகின்றார். அவர் நடிப்பின் வெற்றி, தோல்வி தொடர்பில் விடயங்களைச் சேகரித்துத் தீர்ப்புக் கூறுவார்.
- சிங்கம், பெண், வேட்டைக்காரன், என்பவற்றிற்கிடையில் காணப்படும் தொடர்புகள் பாய்ச்சல் முறை வரைபடம் மூலம் பின்வருமாறு காட்டப்படுகின்றது.




- மேற்குறிப்பிட்ட பாத்திரங்களுக்கு இரு மாணவர் குழுக்களைத் தெரிவு செய்து அவற்றிற்கு A, B எனப் பெயரிடுக.
- குழுக்கள் அவற்றின் பாத்திரங்களை அபிநயம் மூலம் காட்டவேண்டும் என்பதை மாணவர்களுக்கு அறிவுறுத்தவும். இங்கு ஆசிரியர் சைகை காட்டிய பின்னர் குழுக்களிலுள்ள சகலரும் தமது பாத்திரங்களை ஒன்றாக நடித்துக் காட்ட வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தவும்.
- சகல சந்தர்ப்பங்களிலும் நடிக்க முன்னர் தயாராவதற்கு சிறிய கால இடைவெளியை வழங்கவும்.

## ஆலோசனைகள் :

- சிங்கம் கர்ச்சிக்கும் தன்மையையும் முரட்டுத்தனமான இயல்பையும் காட்டுதல். வேட்டைக்காரனுக்குப் பயப்படுவது, பெண்ணுக்கு பயப்படாமை என்பவற்றை அபிநயம் மூலம் காட்டுதல்.
- வேட்டைக்காரன் துப்பாக்கி அல்லது அம்பு மற்றும் ஈட்டி என்பவற்றுடன் குறிபார்க்கும் முறை, பெண்ணுக்குப் பயப்படுவதையும் சிங்கத்திற்கு பயப்படாதிருப்பதையும் அபிநயம் மூலம் காட்டுதல்
- பெண் பயம் மற்றும் நாணம் என்பவற்றுடன் நிற்கும் நிலை. வேட்டைக்காரனுக்குப் பயமின்றியும் சிங்கத்துக்கு பயப்படுவதையும் அபிநயம் மூலம் காட்டுதல்.

- வெற்றி பெற்ற குழுவினைத் தெரிவு செய்தல்
    - ஒரு குழு சிங்கம் போன்று அபிநயம் மூலம் நடித்துக் காட்டும்போது அடுத்த குழு வேட்டைக்காரன் போன்று அபிநயம் செய்தால் வேட்டைக்காரன் குழு பெற்றிபெறும்.
    - ஒரு குழு சிங்கம் போன்று அபிநயம் மூலம் நடித்துக் காட்டும் போது அடுத்த குழு பெண் போன்று அபிநயம் செய்தால் சிங்கக் குழு பெற்றி பெறும்.
    - ஒரு குழு பெண் போன்று அபிநயம் மூலம் நடித்துக் காட்டும் போது அடுத்த குழு வேட்டைக்காரன் போன்று அபிநயம் செய்தால் பெண் குழு வெற்றிபெறும்.
    - சமிக்ஞையின் பின்னர் வெற்றிகரமாக பாத்திரத்தை நடித்துக் காட்டும் குழுவிற்கு புள்ளி வழங்கவும்.
    - ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் இரு குழுக்களும் ஒரே பாத்திரத்தை நடித்துக் காட்டினால் புள்ளி வழங்காது இரு குழுக்களும் சமஅளவு புள்ளியில் இருப்பதாகக் குறிப்பிடவும்.
    - மூன்று சுற்றுக்களாக நடிப்பை மேற்கொள்ளச் செய்யவும்.

**தேர்ச்சி 2.0** : வணிகமொன்றின் வெற்றிக்கு முயற்சியாளர் மூலம் நிறைவேற்றப்படுகின்ற வகிபாகங்களைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம் 2.3** : சிற்றளவு வணிகமொன்றை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்காக முயற்சியாளரொருவர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய தலைமைத்துவ, முகாமைத்துவத் திறன்களை அறிந்து கொள்வார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்தினைக் கற்றபின் மாணவர்கள் பின்வரும் கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- தலைமைத்துவ, முகாமைத்துவ வகிபாகங்களைச் சிறப்பாக மேற்கொள்வதற்கு முயற்சியாளரொருவரிடம் இருக்க வேண்டிய அடிப்படைத் திறன்களைச் சுட்டிக்காட்டுவதற்கும்.
- வழங்கப்பட்ட தலைமைத்துவ, முகாமைத்துவத் திறன்களைச் சுருக்கமாக விளக்குவதற்கும்
- தலைமைத்துவ, முகாமைத்துவத் திறன்களானவை சிற்றளவு வணிகங்களின் வெற்றிக்குத் துணையாக அமையும் முறையினைச் சுட்டிக் காட்டுவதற்குமான கற்றல்பேறுகளைப் பெற்றுக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :**

பாடத் திட்டத்தில் காணப்படும் இத்தேர்ச்சிக்குரிய பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் தொடர்புடையதாக பாட நூலில் காணப்படும் பாட விடயங்கள் தொடர்பாகவும் சிறந்த முறையிலான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளவும். அத்துடன் பின்வரும் ஆலோசனைகள் மீதும் கவனஞ் செலுத்தவும்.

- பாடப் பிரவேசத்தின் போது “தூக்கணாம் குருவிக் கூட்டம் “தொடர்பிலான கடந்த கால பௌத்த ஜாதகக் கதையை மாணவர்களுக்கு முன்வைத்து செய்து தலைமைத்துவத்தை மதிக்காமை, ஒருமைப்பாடு மற்றும் சமத்துவமின்மை போன்ற காரணங்களால் வேடனின் வலையில் சிக்கிய தூக்கணாங் குருவிக் கூட்டத்திற்கு அழிவு ஏற்பட்ட முறையினை விளக்கவும். அவ்வாறின்றேல் அது தொடர்பில் நீங்கள் அறிந்த விடய ஆய்வொன்றினை முன்வைக்கவும்.
- இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடவிடயங்களை முன்வைப்பதற்காக இணைப்பு 2.3. இல் வழங்கப்பட்டுள்ள அட்டவணையின் சதுப்பு நிலத்திலிருநது வெளியேறுதல் எனும் விளையாட்டு முன்மொழியப்பகிறது.
- இணைப்பு 2.3.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ள விளையாட்டிற்கு வழங்கப்பட்ட ஆலோசனைகளை நன்றாக விளங்கிக் கொள்ளவும்.

- விளையாட்டிற்கு இரு தொடர் பாடவேளைகளைப் பயன்படுத்தவும்.
- விளையாட்டின் போது ஒவ்வொரு குழுக்களினதும் நடத்தை, மாணவர்களின் பண்புகள் என்பவற்றைப் அவதானித்துத் அத்தகவல்களைப் பயன்படுத்தி வழங்கப்பட்டுள்ள பாட விடயங்களைப் பகுப்பாய்வு செய்யவும்.
- இணைப்பு 2.3.1 இல் உள்ளடக்கியுள்ள மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளைக் கணிப்பீடு செய்யும் பத்திரத்தை ஒவ்வொரு மாணவர்களுக்கும் வழங்கி அவர்கள் பெற்ற புள்ளிகளுக்கமைய மதிப்பீடொன்றை மேற்கொள்ளவும். இதற்கு ஐந்து நிமிடங்கள் போதுமானது.
- தலைமைத்துவ, முகாமைத்துவத் திறன்களை வெளிப்படுத்தக் கூடிய இரு பாட வேளைகளினுள் செய்து முடிக்கக்கூடிய நீங்கள் நன்றாக அறிந்த விளையாட்டொன்றையும் இதற்குப் பயன்படுத்த முடியும்.

**அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :**

- தொழில் நுட்பத்திறன்
- மானிடத்திறன்
- எண்ணக்கரு ரீதியிலான திறன்
- குழுவில் ஒத்துழைப்புடன் வேலை செய்யும் திறன்.
- தொடர்பாடல் திறன்.
- ஆலோசனைத் திறன்
- முன் மாதிரியாகச் செயற்படும் திறன்
- குழுவொன்றைப் பிரிதநிதித்துவப்படுத்தும் திறன்.

## தர உள்ளீடுகள்

- தரம் 10 பாடநூல்
- இணைப்பு 2.3.2 இல் முன்மொழியப்பட்ட விளையாட்டிற்கு தேவையான பொருட்கள்.
- இணைப்பு 2.3.1 இற்குத் தேவையான பிரதிகள்.


## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- சிற்றளவு வணிகமொன்றை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு முயற்சியாளரொவரிடம் காணப்பட வேண்டிய தலைமைத்துவ முகாமைத்துவ திறன்களைக் குறிப்பிட்டுக் காட்டுவார்.
- வழங்கப்பட்ட தலைமைத்துவ, முகாமைத்துவ திறன்களின் கருத்துக்களைச் சுருக்கமாக விளக்குவார்.
- தலைமைத்துவ, முகாமைத்துவத் திறன்கள் சிற்றளவு வணிகமொன்றின் வெற்றிக்குக் காரணமாயமையும் முறையினைச் சுட்டிக்காட்டுவார்.

இணைப்பு 2.3.1

**“சதுப்பு நிலத்திலிருந்து வெளியேறுதல் “ எனும் விளையாட்டுக்கான ஆலோசனைகள்**

- போட்டிக்கு வகுப்பறைக்கு வெளியே பாடசாலையில்/ முற்றவெளியில் /மைதானத்தின் இடமொன்றைத் தெரிவு செய்து கொள்ளவும்.
- 8 மீட்டர் தூரம் கொண்ட பிரதேசமொன்றை சேற்று நிலப்பிரதேசம் எனக் கருதுகோளாகக் கருதுக. கருதுகோளாக கொள்ளப்பட்ட சேற்று நிலத்தினை A, B, C என்றவாறு சுவட்டுப் பாதையாக அடையாளப்படுத்தவும்.




8 m அளவு

- குழுவிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையைவிட ஒரு சுவட்டுப் பாதை மேலதிகமாக இருக்குமாறு குழுவிற்குப் பாதங்களைப் பதிக்கும் அட்டைகளைப் பெற்றுக் கொடுக்கவும் ( 12″ x 8″ அளவு கொண்டதான தடித்த அட்டைகளை பாதங்களைப் பதிக்கும் அட்டைகளாகப் பயன்படுத்தவும்)
- வழங்கப்பட்ட அட்டைகளைப் பயன்படுத்தி சதுப்பு நிலத்திலிருந்து கடந்து செல்லுதல் வேண்டும் என மாணவர் குழுக்களுக்கும் அறிவித்தல் வழங்கவும்.
- போட்டியை மத்தியஸ்தம் வகிப்பதற்காக குழுவிலிருந்து ஒருவர் அல்லது இருவரை மாத்திரம் தெரிவு செய்து அவர்களை எதிரணிக் குழுக்கள் அவதானிக்குமாறு ஈடுபடுத்தவும்.
- வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய போட்டி நடைபெறும் எனவும் அதற்கமைய மத்தியஸ்தம் வகிப்பது அவர்களது பொறுப்பாகும் எனக் கூறுங்கள்.
- குறியீடுகள் மூலம் காட்டப்படும் திசையிலிருந்து மாணவர் குழுக்களைச் சேர்ந்த சகலரும் ஆரம்பிக்கும் இடத்திலிருந்து முடிவடையும் இடம் வரையும் கடந்து செல்ல வேண்டும்.
- சேற்று நிலத்தைக் கடந்து செல்லும் பொழுது பின்வரும் நிபந்தனைகள் பின்பற்றப்படல் வேண்டும் என ஆலோசகைள் வழங்கவும்.
- காற்பாதங்களை மட்டும் பயன்படுத்தி கடந்து செல்ல வேண்டும்.
- சகல வேளையிலும் குழு அங்கத்தவரொருவரின் உறுப்பொன்று (கை, கால் ) பாதை அட்டையின் மேல் பதித்திருத்தல் வேண்டும்.
- பதியாது விடப்பட்ட அட்டைகள் காணப்படின் அவை சேற்றில் அமிழ்ந்து மறைந்துவிடும் (இதற்கமைய தொடுகையற்ற பாத அட்டை காணப்படும் பொழுது உடனடியாக அதனை மத்தியஸ்தர்களினால் மீள எடுத்தல் வேண்டும்)
- அவ்வாறு பாத அட்டைகளைப் பாதுகாக்க முடியாது போனால் சேற்று நிலத்தைத் கடந்து செல்வது மிகக் கடினமானதாகும்.

- வழங்கப்பட்ட பாத அட்டைகளை மட்டும் பயன்படுத்திச் சேற்று நிலத்தைக் கடந்து செல்ல வேண்டும் எனவும்.
- வெற்றி பெறுவதற்காக குழுவின் அனைவரும் சேற்று நிலத்தை கடந்து செல்லுதல் வேண்டும் எனவும்
- இறுதியாகக் கடப்பவர் எஞ்சியுள்ள பாத அட்டைகளை எடுத்துச் செல்லுதல் வேண்டும் எனவும்
- குறித்த காலத்தினுள் சேற்று நிலத்தைக் கடந்து செல்ல வேண்டும் எனவும்
- மாணவர்கள் இரண்டு அல்லது மூன்று நபர்களைப் பயன்படுத்தி விளையாட்டினை முன்மாதிரியாகச் செய்து காட்டவும்
- சகல குழுவினர்களும் பங்குபற்றுவதற்கும், சேற்று நிலத்தைக் கடப்பதற்குமாக 20 நிமிடங்களை வழங்கவும்
- குழுக்களை ஒரே முறையில் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குச் செய்யவும்.

இணைப்பு 2.3.1

## தலைமைத்துவப் பண்புகள்

- பின்வரும் வினாக்களுக்கு ஆம் அல்லது இல்லை எனும் விடையினைப் பெறுவதினூடாக மாணவர்களிடம் காணப்படும் தலைமைத்துவ இயலுமையினை மதிப்பிடுங்கள்.

1. நான் தூரநோக்கின்றி நடுநிலையான நோக்குடனேயே செயற்படுகின்றேன். ----------------------
2. தனி நபர்கள் மூலம் ஏற்படும் அச்சுறுத்தல்கள், நெருக்குதல்களை ஏற்கும் வல்லமை என்னிடம் உள்ளது. ----------------------
3. நான் எனது இலக்கினை அடைந்து கொள்வதற்காக ஆலோசனைகளை எவ்வேளையிலும் வேண்டி நிற்கிறேன். ----------------------
4. இருக்கின்ற நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் நான் கூடிய நாட்டமுடையவனாக இருக்கிறேன். ----------------------
5. பிரச்சினையொன்று இருக்கின்ற பொழுது உடனடித் தீர்வொன்றை வழங்காது பிரச்சினையை நன்றாக விளங்கிக் கொள்வதற்காக முயற்சிப்பேன். ----------------------
6. நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக எனது வழமையான நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நான் விருப்பமுடையவனாக இருக்கிறேன். ----------------------
7. தோல்வியின் முன்னால் சந்தர்ப்பத்திற்கேற்ப பின்வாங்கிச் செய்வதற்கு ஆயத்தமாக இருப்பேன். ----------------------
8. மிக முக்கியமான பொறுப்புக்கள் கிடைக்கும் பொழுது அவற்றைக் குழுக்களின் பொருத்தமான அங்கத்தவர்களிடம் ஒப்படைப்பேன். ----------------------
9. கருமங்களில் ஈடுபடும் பொழுது எனது உச்ச பலன் தொடர்பில் நம்பிக்கை கொள்வேன். ----------------------
10. நான் வெற்றிக்கு மட்டும் மதிப்பளிப்பதுடன் தோல்விகளை விருப்பமின்றி நிராகரிப்பேன். ----------------------
11. எனது உதவியாளர்களுக்கு பிரச்சினைகளும் அச்சுறுத்தல்களும் ஏற்படும் பொழுது அவற்றைத் தீர்ப்பதற்காக நான் துணை நிற்பேன். ----------------------
12. நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக எனது சொந்த உழைப்பில நம்பிக்கை கொள்வேன். - ----------------------

- 1,3,8,9,10 என்பவற்றிற்கான விடை "இல்லை" என்பதற்காக ஒவ்வொரு புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளகள் 05
- 2,4,6,7,11,12 ஆகிய வினாக்களுக்கான விடை ஆம் என்பதற்காக ஒவ்வொரு புள்ளிகள் வீதம் மொத்ததப் புள்ளிகள் 07

12

**தேர்ச்சி 3.0** : முயற்சியாளரொருவர் எனும் வகையில் வணிகச் சூழலைப் பகுப்பாய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : வணிகச் சூழலை இனங் காண்பதற்காக வணிகச் சூழற் காரணிகளைத் தனித்தனியாக தேடியறிவார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்தினைக் கற்றபின் மாணவர்கள் பின்வரும் கற்றல் பேறுகளை அடைந்து கொள்வார்.

- வணிகச் சூழல் காரணிகளை விளக்குவதற்கும்
- முயற்சியாளரொருவர் எனும் வகையில் வணிகச் சூழல் தொடர்பில் கவனஞ் செலுத்துவதன் முக்கியத்துவத்தினைக் கலந்துரையாடுவதற்கும்
- வணிகச் சூழலின் பிரிவுகளுடன் வணிகச் சூழலை வகைப்படுத்திக் காட்டுவதற்குமான கற்றல்பேறுகளைப் பெற்றுக் கொள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

பாடவிதானத்தில் இத்தேர்ச்சிக்கமையக் காணப்படும் பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் தொடர்புடையதாக பாடப் நூலில் காணப்படும் பாட விடய ங்கள் தொடர்பாகவும் சிறந்த முறையிலான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளவும். அத்துடன் பின்வரும் ஆலோசனைகள் மீதும் கவனஞ் செலுத்தவும்.

- பாடசாலையை நிறுவனமொன்றென உதாரணமாகக் கொண்டு அதன் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளை மாணவர்களிடம் கேட்டறிந்து சிந்தனைக் கிளறலொன்றில் ஈடுபடச் செய்யுங்கள்.
- மாணவர்களது துலங்கல்களைக் கருத்திற் கொண்டு வணிகச் சூழல் தொடர்பான விளக்கத்தை வழங்குவதற்காகப் பிரவேசிக்க முடியும்.
- சூழலினால் ஏறப்டுத்தப்படும் தாக்கம் தொடர்பாக விளக்கத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக பலூன் உடைத்தல், விளையாட்டில் மணாவர்களை ஈடுபடுத்த முடியும்.
- இவ்விளையாட்டுத் தொடர்பான ஆலோசனைகள்
    - மாணவர்களை இரு குழுக்களாக வகைப்படுத்தவும்.
    - மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப இரு வர்ணங்களிலான பலூன்களை வழங்கவும்.
    - பொதுவான அளவில் ஊதக் கூடியவாறான பலூனொன்று வீதம் ஒவ்வொரு மாணவர்களது கைகளிலும் கட்டிக் கொள்ளச் செய்யவும்.
    - தனது குழுவின் பலூன்களைப் பாதுகாத்துக் கொண்டு ஏனைய குழுவினர்களது பலூன்களை உடைப்பதற்காக யாதேனும் சமிக்ஞையொன்றின் பின்னர் சந்தர்ப்பம் வழங்கவும்.
    - வரையறுக்கப்பட்ட இடமொன்றில் (உதாரணம் : வகுப்பறை) விளையாட்டில் ஈடுபடவும்.
      (ஏனைய வகுப்புக்களது செயற்பாடுகளுக்குத் தடையேற்படாதவாறு கவனித்துக் கொள்ளவும்)
    - விளையாட்டின் பின்னர் சூழலில் ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாகக் கலந்துரையாடி விளக்கமொன்றை வழங்கவும்.
    - சூழலில் ஏற்படும் தாக்கங்களின் தன்மை, அளவு என்பவற்றிற்கேற்ப மாணவர்களின் தன்னிச்சையான தீர்மானங்கள், தந்திரோபாய வழிமுறைகள், செயற்படுத்தப்பட்ட முறைகள், என்பவை தொடர்பாக அறியச் செய்யவும்

- பொதுவாக உங்களது பாடசாலையில் அன்றாடக் கருமங்களில் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய காரணிகளை உள்ளடக்கிப் பட்டியலொன்றைத் தயாரிக்கச் செய்யவும்.
- பாடசாலை நடவடிக்கைகளின் மீது சாதகமான, பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வுகள் தொடர்பிலான தகவல்களை அதிபரிடமிருந்து பெற்று அட்டவணை ஒன்றைத் தயாரிக்கவும்.

**அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :**

- வணிகச் சூழல்
- அகச் சூழல்
- புறச் சூழல்

## தரஉள்ளீடு

- தரம் 10 பாடநூலின் 5ஆம் அலகு.
- விளையாட்டிற்கு தேவையான பிரதிகள்

## கணிப்பீட்டு மதிப்பீடு நியதிகள் :

- வணிகச் சூழலை சரியாக இனங்காண்பார்.
- வணிகச் சூழலின் மாற்றங்கள் காரணமாக உருவாகின்ற பலங்கள், பலவீனங்கள், சந்தர்ப்பங்கள், சவால்கள் என்பவற்றைத் தெளிவுபடுத்துவார்.
- வணிகச் சூழலை அக, புற சூழல் என வகைப்படுத்தி அச்சூழலில் உள்ளடக்கப்படுகின்ற பிரிவுகளைப் பெயரிடுவார்.

**தேர்ச்சி 3.0** : முயற்சியாளரொருவர் எனும் வகையில் வணிகச் சூழலை பகுப்பாய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : வணிக அகச் சூழற் காரணிகளின் செயற்பாட்டினைப் பகுப்பாய்வு செய்வார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றற் பேறுகள்** :

- இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்தினை கற்றபின் மாணவர்களுக்குப் பின்வரும் கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- வணிகமொன்றின் உள்ளகச் (அக) சூழலை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துவதற்கும்
- வணிகமொன்றின் உள்ளகச் (அக) சூழலில் இனங்கண்ட பலங்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்கும்
- வணிக உள்ளகச் சூழலில் இனங்கண்ட பலவீனங்களுக்குத் தீர்வுகளை முன்மொழிவதற்குமான கற்றல் பேருகளைப் பெற்றுக் கொள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான் ஆலோசனைகள் :

பாடத்திட்டத்தில் இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் இணைந்த பாட விடயங்கள் தொடர்பிலும் சிறந்த தெளிவினைப் பெற்றுக் கொள்ளவும். பின்னர் ஆலோசனை தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.

- இப்பாடத்திற்குப் பிரவேசிப்பதற்கு உமது பாடசாலையின் உள்ளகச் சூழல் தொடர்பிலான காரணிகளைப் பட்டியற்படுத்தவும்.
- வணிகம் தொடர்பிலான பின்வரும் கூற்றினை வாசித்து நிரலில் காணப்படும் சரியான விடையினைத் தெரிவு செய்து "√" அடையாளமிடுக.

| | பலமாகும் | பலவீனமாகும் | கூறமுடியாது |
|---|---|---|---|
| 01. ஊழியர்கள் வேலைக்கு வருவது ஒழுங்கற்றதாகக் காணப்படுகின்றது. | | | |
| 02. வாடிக்கையாளர்களுக்கு வசதியான இடத்தில் வணிகம் நிறுவப்பட்டுள்ளது. | | | |
| 03. வணிகத்திற்குத் தேவைப்படும் பொருட்களை விநியோகிப்பவர்களுக்கான கொடுப்பனவு தாமதமாகின்றது. | | | |
| 04. வாடிக்கையாளர்கள் வணிகத்திற்கு தொடர்ந்து வருகை தருகின்றார் | | | |
| 05. முகாமையாளர் உச்ச அளவில் மானிட விரும்பியாகச் செயற்படுகின்றார். | | | |
| 06. தரமான பண்டங்களை நியாயமான விலைக்கு வழங்குவதற்கான இயலுமை உள்ளது. | | | |
| 07. பண்டங்களின் விலை உயர்வடைந்துள்ளதால் நிறுவனத்தின் விற்பனையில் குறைவொன்றைக் காணக்கூடியதாகவுள்ளது. | | | |
| 08. உரிமையாளர் இலாபத்திற்கு முதலிடம் கொடுத்து செயல்படுகின்றார். | | | |
| 09. ஊழியர்கள் நிறுவனத்தின் மீது சிறந்த தொடர்பினைக் கொண்டுள்ளனர். | | | |
| 10. உரிமையாளர் சுயாமாக எடுத்த தீர்மானங்களை மாற்றுவதில்லை. | | | |

- இணைப்பு 3.2.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ள சாமுவேல் வணிகத்தின் விடய ஆய்வினை குழுக்களுக்கு வழங்கி அதன் விளக்கத்தினைப் பெற்றுக்கொடுப்பதில் ஈடுபடுத்தி அவ்வணிகத்துடன் தொடர்புடைய பிரிவினர்களையும் அவ்வொவ்வொரு பிரிவினர்களினதும் இனங்காணக்கூடிய பலங்கள் மற்றும் பலவீனங்களை அறிந்து கொள்வதற்கான செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.

அல்லது

- இவ்வணிகத்தின் விடய ஆய்வினை வாசிக்கும் பொழுது இரு தடவைகளாவது செவிமடுக்கச் செய்ததன் பின்னர் செயற்பாட்டில் ஈடுபடச் செய்யவும்.

**அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :**

- அகச் சூழல் காரணிகள்.
- பலங்களும் பலவீனங்களும்.

## தர உள்ளீடு

- தரம் 10 பாடநூலில் 5ஆம் அத்தியாயம்
- இணைப்பு 3.2.1 இற்கு தேவையான இணைப்புப் பிரதிகள்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- பணியாளர்கள், உரிமையாளர்கள் போன்ற பிரிவினர்களை உதாரணங்களாக முன்வைத்து அகச் சூழலினைத் தெளிவுப்படுத்துவார்.
- அகச் சூழற் காரணிகளுடன் தொடர்புடைய பலங்களுக்கான உதாரணங்களை சுட்டிக்காட்டுவார்.
- அகச் சூழற் காரணிகளுடன் தொடர்புடைய பலவீனங்களைப் பட்டியற்படுத்துவார்.
- ஆகச் சூழலின் பலவீனங்களைத் தவிர்ப்பதற்குப் பொருத்தமான ஆலோசனைகளை முன்மொழிவார்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் காணப்படும் சாமுவேல் வணிகமானது ஒரு வீடொன்றிற்குத் தேவையான சகல பொருட்களையும் கொள்வனவு செய்வதற்கு முடியுமான பாரியளவிலான சில்லறை விற்பனை வணிகமொன்றாகும். சாமுவேல் என்பவர் வணிகத்தின் தற்போதைய உரிமையாளரின் தந்தையாவார். எந்தவொரு விளம்பரமொன்றிலும் சாமுவேல் எனும் பெயர் காணப்படாதிருப்பினும் சாமுவேல் எனும் பெயரானது சுற்றுச்சூழலில் மிகவும் பிரபல்யமாக இருக்கின்றது. இன்று வணிகத்தின் முகாமையானது உரிமையாளரினால் அவரது வணிகத்தில் பணியாற்றுவதற்காக அமர்த்தப்பட்ட கமல் எனும் சிறுவன் மூலமே மேற்கொள்ளப்படுகின்றது. அச்சிறுவன் அனைத்துப் பணிகளையும் தேடியறிந்து கருமமாற்றுவதுடன், புதிய பழக்கமற்ற வாடிக்கையாளர்கள் இச்சிறுவனே வணிகத்தின் உரிமையாளர் என ஊகித்துக் கொள்கின்றனர். பழைய வாடிக்கையாளர்களின் பிள்ளைகளும், அவர்களது சந்ததியினரும் கூட இவ்வணிகத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்வதை காணக்கூடியாக உள்ளது. அவர்கள் இவ்விற்பனை நிலையத்தில் இல்லாத பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவே வேறு விற்பனை நிலையங்களுக்குச் செல்கின்றனர் என்பது அதிசயமானதல்ல. உயர் தரத்திலான பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதே அன்று தொட்டு இன்றைய காலப் பகுதி வரையில் இவ்வணிகத்தின் பண்பொன்றாக உள்ளது. இவ்வணிக நிலையமானது இப்பிரதேசத்தில் நாளாந்தம் அதிகாலையில் திறக்கப்பட்டு நடு இரவில் மூடப்படும் ஒரேயொரு விற்பனை நிலையமாகக் காணப்படுகிறது. பணியாளர்களும் வணிகத்தின் நீடித்த நிலைப்பாட்டிற்குப் பழக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு இப்பழக்கத்திற்கு இசைவாக்கமடைய முடியாத புதிய பணியாளர்கள் ஓரிரு நாட்களில் அவர்களாகவே தமது பணியினை விட்டு விலகிக் கொள்கின்றனர். இவ்வணிகத்தில் கமலினால் பிளாஸ்திக் பொருட்கள் சுய விற்பனைப் பிரிவில் மூன்றுக்கு ரூபா 200 எனும் விற்பனை செய்யும் எண்ணக்கருவின் மூலம் அப்பொருட்களது விற்பனையானது அதிகரித்துள்ளது. ஆயினும் நுகர்வுப் பொருள் விற்பனைப் பிரிவின் சுயசேவைப் பிரிவொன்றாக நடாத்திச் செல்லல் அதிகளவிலான பொருட்களை கொள்வவு செய்யும் வாடிக்கைாளர்களின் பொருட்களை அவர்களது வீட்டுக்கே கொண்டு சென்று விநியோகித்தல், தொலைபேசிகள் மூலம் கட்டளைகளைப் பெற்று அவற்றை விநியோகித்தல் போன்ற புதிய முறைகளை அறிமுகப்படுத்துவதற்கான தேவை காணப்பட்டாலும் உரிமையாளர் அவ்வாறான விடயங்களுக்குக் கூடிய அக்கறை செலுத்தாமையானது கமலின் மனம் சோர்வடைவதற்குக் காரணமாக அமைந்திருந்தது என்பதனை அவனது பேச்சுக்களிலிருந்து அறியக்கூடியதாக இருந்தது. வணிகத்தின் வெற்றியானது தனது வெற்றியாகும் என்பதனை வணிகத்துடன் தொடர்புடைய அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

**தேர்ச்சி 3.0** : முயற்சியாளரொருவர் எனும் வகையில் வணிகச் சூழலை பகுப்பாய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** வணிகப் புறச்சூழல் காரணிகளின் செயற்பாட்டினை பகுப்பாய்வு செய்வார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றற் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்தினைக் கற்றபின் மாணவர்களுக்குப் பின்வரும் கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- வணிகமொன்றின் புறச் சூழற் காரணிகளை உதாரணங்களுடன் விபரிப்பதற்கும்
- வணிகமொன்றின் அகச் சூழலின் மூலம் இனங்காணப்பட்ட சந்தர்ப்பங்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதற்கும்
- வணிகமொன்றின் புறச் சூழலில் இனங்காணப்பட்ட அச்சுறுத்தல்களுக்குத் தீர்வுகளை முன்மொழிவதற்குமான கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்வார்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :**

பாடத் திட்டத்தில் இத்தேர்ச்சியில் காணப்படும் பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் தொடர்புடைய பாடப் புத்தகத்தில் காணப்படும் பாட விடயங்கள் தொடர்பாகவும் சிறந்த முறையிலான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளவும். அத்துடன் பின்வரும் ஆலோசனைகள் மீதும் கவனஞ் செலுத்தவும்.

- பாடசாலையை உதாரணமாகக் கொள்வோமாயின் பாடசாலையின் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய செயற்பாட்டு நடவடிக்கைகள் எவை என்பது தொடர்பாக மாணவர்களிடம் கேட்டு, சிந்தனைக் கிளறல் பயிற்சியில் ஈடுபடச் செய்யவும். இதற்காக 15 நிமிடங்கள் வரையிலான காலத்தை ஒதுக்கிக் கொள்ளவும்.
- பின்வரும் விளையாட்டின் மூலம் நோக்கத்தை நிறைவேற்றும் பொழுது வெளியிலிருந்து ஏற்படும் தாக்கம் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக 10 நிமிடங்கள் ஒதுக்குவது போதுமானது.
  - வகுப்பறையினுள் ஒரு நிமிடத்தினுள் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் கருமங்களை மாணவர்களிடம் கேட்டறியவும்.
  - அக்கருமங்களை நிறைவேற்றும் பொழுது சூழலினால் தடைகள் ஏற்பட முடியும் என்பதை அறியச் செய்து தெரிவு செய்த சில மாணவர்களுக்கு ஏனைய மாணவர்கள் அறியாதவகையில் அவ்வாறான தடைகளை ஏற்படுத்துமாறு கூறி அதில் ஈடுபடுத்தவும்.
  - முன்வரும் மாணவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களது நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவும்.
  - யாதேனும் சமிக்ஞையின் பின்னர் அந்நோக்கத்தை நிறைவேற்றுவதில் ஈடுபடுத்தவும்.
- பாடசாலையானது சிற்சில நோக்கங்களையும் இலக்குகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக அதன் கருமங்களை செயல்முறைப்படுத்தும் நிறுவனமொன்றாகும் எனவும், திட்டமிடப்பட்டுள்ளவாறு இலக்கினை அடைந்து கொள்ளும் பொழுது புறத்தாக்கங்கள் ஏற்பட முடியும் எனவும் விளக்கி அத்தாக்கங்களுக்குப் பொருத்தமான துலங்கல்களை ஏற்படுத்தி நோக்கங்களை அடைந்து கொள்ள வேண்டியேற்படும் என உதாரணங்களினூடாக விபரித்து எதிர்பார்க்கப்பட்ட பாடவிடயங்களை முன்வைக்கச் செய்யவும்.
- காட்டப்பட்டுள்ள சூழற் காரணிகள் தொடர்பான பாடவிடயங்களை முன்வைக்கும் பொழுது இயன்றளவில் பொருத்தமான உதாரணங்களினூடாக சுட்டிக்காட்டுங்கள்.

- புறச் சூழற் காரணிகளின் தாக்கங்களினால் ஏற்படும் அச்சுறுத்தல்கள், சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்களைக் குறித்துக் காட்டி மாணவர்களிடம் அவ்வாறான அச்சுறுத்தல்கள், சந்தர்ப்பங்கள் தொடர்பாகக் கேட்டறியுங்கள்.
- இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடங்களின் பின்னர் பின்வரும் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்தவும்

(1) பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சூழற் காரணிகளின் தாக்கங்கள் எவ்வாறான சூழற் காரணிகளுக்குரியது என்பதைத் தீர்மானித்து அதற்குரிய சட்டகத்தினுள் √ அடையாளமிடுவதற்கு ஆலோசனை வழங்கவும்.

| சூழற் காரணிகள் / சூழற் காரணிகள் தாக்கம் | பொருளாதாரச் சூழற் காரணிகள் | தொழில்நுட்பச் சூழற் காரணிகள் | மக்கட் சூழல் காரணிகள் | இயற்கைச் சூழற் காரணிகள் | அரசியல் சட்டச் சூழற் காரணிகள் | பூகோளமயமான சூழற் காரணிகள் |
|---|---|---|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரி அறவிடப்படல். | | | | | | |
| சனத்தொகையில் ஆண், பெண் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படல் | | | | | | |
| குறிப்பிட்ட சில வகை பொருட்களுக்கு நியமங்களை விதித்தல். | | | | | | |
| சர்வதேச நியமங்களுடன் கூடிய பொருட்களை மாத்திரம் வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்தல். | | | | | | |
| பிரதானமான இரு நாடுகளுக்கு இடையில் கடும் யுத்த சூழ்நிலை ஏற்படல். | | | | | | |
| சூரிய சக்தியின் மூலம் இயங்கக் கூடிய இயந்திராதிகளை அறிமுகப்படுத்தல். | | | | | | |
| கூடிய விளைச்சலைப் பெறுவதற்காக பழைய நுட்ப முறைகளைப் பரீட்சித்துப் பார்த்தல். | | | | | | |
| வடக்கில் யுத்தம் காரணமாக வெளியேறிய மக்கள் மீளக்குடியமர்தல் | | | | | | |
| கற்றல் - கற்பித்தல் ஊடகமாக கைத்தொலைபேசியினைப் பயன்படுத்துதல். | | | | | | |

(2) மேற்காட்டியவாறான சூழற் தாக்கங்களை உள்ளடக்கிய அட்டவணையொன்றை மாணவர்களைக் கொண்டு தயாரிக்கச் செய்யவும். இதனைக் குழுச் செயற்பாடொன்றாக வழங்கவும். ஒரு குழுவினரால் தயாரிக்கப்பட்ட அட்டவணையை மற்றோர் குழுவினரிடம் வழங்கி புள்ளி வழங்கச் செய்யலாம்.

(3) நீங்கள் பல்வேறு சூழற் காரணிகளின் தாக்கங்களை தடவைக்கு ஒவ்வொன்று வீதம் குறித்துக் காட்டவும். அத்தாக்கங்களுக்கமைய ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் அல்லது சந்தர்ப்பங்களை குறித்துக் காட்டுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்கவும். வழங்கப்பட்ட சரியான விடைகளுக்கு ஒரு புள்ளி வீதம் வழங்கவும். இதனைப் போட்டியொன்றாக நடாத்த முடியும். இப்போட்டியைத் தனியாகவோ அல்லது குழுவாகவோ நடாத்த முடியும்.

**அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :**

- புறச் சூழல் காரணிகள்.
- சந்தர்ப்பங்களும், சவால்களும்.

## தர உள்ளீடு

- தரம் 10 பாடநூலில் 5ஆம் பாட அலகு

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- புறச் சூழல் காரணிகளை உதாரணங்களுடன் காட்டுதல்.
- புறச் சூழலைப் பகுப்பாய்வு செய்யும் பொழுது காணக்கூடிய வணிக சந்தர்ப்பங்களில் முக்கியத்துவமளிக்கக் கூடிய சந்தர்ப்பங்களை இனங்காணுதல்.
- புறச் சூழல் காரணிகளினால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை வெளிப்படுத்தல்.
- புறச் சூழல் காரணிகளினால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களுக்கான தீர்வுகளை முன்மொழிதல்.

**தேர்ச்சி 3.0** : முயற்சியாளரொருவர் எனும் வகையில் வணிகச் சூழலைப் பகுப்பாய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 3.4 :** முயற்சியாளரென்ற வகையில் இலங்கையின் பொருளாதாரம் தொடர்பாகத் தேடியறிவார்.

**பாடவேளைகள்** : 06 பாடவேளைகள்

**கற்றற்பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்தினைக் கற்றபின் மாணவர்களுக்கும் பின்வரும் கற்றல் பேறுகளை அடைந்து கொள்ள முடியும்.

- இலங்கையின் பொருளாதாரத்தில் பிரதானமான வணிகத்துறைகளை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துவதற்கும்
- வணிகங்கள் பயன்படுத்தக் கூடியவாறு இலங்கையில் அருமையாகக் கிடைக்கும் வளங்களுக்கான உதாரணங்களைச் சுட்டிக்காட்டுவதற்கும்
- வணிகரொருவர் எனும் வகையில் வணிகச் சூழற் போக்குகள் தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுவதற்குமான கற்றல்பேறுகளைப் பெற்றுக் கொள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

பாடத்திட்டத்தில் இத்தேர்ச்சி காணப்படும் பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் தொடர்புடைய பாடப் புத்தகத்தில் காணப்படும் பாட விடயங்கள் தொடர்பாகவும் சிறந்த முறையிலான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளவும். அத்துடன் பின்வரும் ஆலோசனைகள் மீதும் கவனஞ் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்திற்கேற்ப பாடத்தில் பிரவேசிப்பதற்காக இலங்கையில் அருமையாகக் காணப்படும் வளங்கள் எவை எனும் வினாவை மாணவர்களிடம் தொடுத்து விடைகளாக வெளிப்படுத்துவதில் ஈடுபடச் செய்யவும். அவ்விடைகளைக் கரும்பலகையில் எழுதவும். இதற்காக ஐந்து நிமிடங்கள் வரையிலான காலத்தை ஒதுக்கிக் கொள்ளவும். அதிக விடைகளை வழங்கிய மாணவரை உற்சாகப்படுத்துங்கள்.
- அத்துடன் இலங்கையின் வரலாற்றுப் பெறுமானங்களை இங்கு காணப்படும் வளங்கள் தொடர்பாக சுருக்கமான கலந்துரையாடலொன்றைச் செய்யுங்கள். அக்கலந்துரையாடலின் பின்னர் மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து இணைப்பு 3.4.1இல் குறிப்பிடப்பட்டுள்ள படத்தை உள்ளடக்கிய படிவத்தை வழங்கி பின்வரும் ஆலோசனைகளின் கீழ் மாணவர்களை தேடியறிதலில் ஈடுபடுத்தவும். ஒரு குழுவிற்கு ஒரு படம்.
  - படங்களில் காணப்படும் வளங்களைப் பெயரிட்டு பட்டியற்படுத்தச் செய்யுங்கள்.
  - படங்களில் காட்டப்படாத ஏனைய வளங்கள் 10 ஐப் பட்டியற்படுத்தச் செய்யவும்.
  - அவ்வளங்களை யாதேனும் வகைப்படுத்தல்களின் அடிப்படையில் வகைப்படுத்துவதில் ஈடுபடுத்தச் செய்யவும்.
  - அவ்வவ் வளங்களையும் பயன்படுத்தி தற்போது காணப்படும் வணிகங்கள் 10 இனையும், நடைமுறையில் இல்லாத ஆயினும் எதிர்காலத்தில் உருவாக்கக் கூடிய வணிகங்கள் ஐந்தினையும் எழுதுவதற்கு ஆலோசனை வழங்கவும்.

**தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடங்களுக்குப் பின்னர் பின்வரும் செயற்பாடுகளை வழங்கவும்.**

1. உங்கள் பிரதேசத்தில் காணப்படும் வளங்களை இனம்கண்டு பின்வரும் தலைபபுக்களின் அடிப்படையில் பட்டியற்படுத்தச் செய்யவும்.
   (i) நிலத்துடன் தொடர்புடைய இயற்கை வளங்கள்.
   (ii) மனிதர்கள் மூலம் உருவாக்கப்பட்ட வளங்கள்.
2. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வளங்கள் தொடர்பில் நிகழ்காலத்தில் தோன்றியுள்ள தொழிற்சாலைகள் அல்லது வணிகங்களைப் பெயரிடுதல்.
3. நிகழ்காலத்தில் உருவாக்கப்படாதுள்ள ஆயினும் அவ்வவ் வளங்களினூடாக எதிர்காலத்தில் தோன்றக்கூடிய வணிகங்களைப் பட்டியற்படுத்தச் செய்யவும்.

**அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :**

- முதனிலை உற்பத்தித்துறை
- இரண்டாம் நிலை உற்பத்தித்துறை
- மூன்றாம் நிலை உற்பத்தித்துறை


## தர உள்ளீடு

- தரம் 10 பாடநூலில் 5ஆம் பாட அலகு.
- இணைப்பு 3.4.1 இல் காணப்படும் இலங்கையின் வரைபடம்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- பிரதான வணிகத்துறைகளை உதாரணங்களுடன் விளக்குவார்.
- இலங்கையில் அருமையாகக் காணப்படும் வளங்களுக்கான உதாரணங்களை முன்வைப்பார்.
- சூழலின் போக்குகள் தொடர்பில் கவனஞ் செலுத்துவதன் முக்கியத்துவத்தை கலந்துரையாடுவார்.


Sri Lanka (Ceylon)
POINT PEDRO
KAYTS
JAFFNA
DELFT
ELEPHANT PASS
KILLINOCHCHI
MULLATIVU
TALAIMANNAR
MANNAR
VAVUNIYA
NILAVELI
TRINCOMALEE
WILPATTU NATIONAL PARK
ANURADHAPURA
MIHINTALE
PUTTALAM
POLONNARUWA
MANAMPITIYA
SIGIRIYA
KANDALAMA
DAMBULLA
PASSIKUDAH
BATTICALOA
CHILAW
KURUNEGALA
MATALE
KNUCKLES
KANDY
PERADENIYA
KEGALLA
WAIKKAL
NEGOMBO
KATUNAYAKE AIR PORT
AMPARA
ARUGAMBAY
LAHUGALA
POTTUVIL
COLOMBO
HATTON
HORTON PLAINS
ADAMS PEAK
RATNAPURA
PANADURA
KALUTARA
BERUWELA
BENTOTA
AHUNGALLE
AMBALANGODA
HIKKADUWA
GALLE
UNAWATUNA
WELIGAMA
MATARA
TANGALLA
HAMBANTOTA
TISSAMAHARAMA
KATARAGAMA
DENIYAYA
EMBILIPITIYA
ELLA
WELLAWAYA
Bombay
Hyderabad
Bangalore
Madras
Colombo
Sri Lanka
Maldives
Male
INDIAN OCEAN
N
W
S
E-mail: sales@heritage.lk
Web: www.heritage.lk


SRI LANKA
The Pearl of the Indian ocean
KANKESANTURAI
JAFFNA
TALAIMANNAR
MANNAR
TRINCOMALEE
PULMODDAI
ANURADHAPURA
WILPATTU
PUTTALAM
SIGIRIYA
POLONNARUWA
BATTICALOA
KURUNEGALA
CHILAW
MATALE
KANDY
GAL-OYA
NUWARA-ELIYA
NEGOMBO
KEGALLE
HATTON
MONARAGALA
DICKOYA
KATUNAYAKE
COLOMBO
BADULLA
MT. LAVINIA
BANDARAWELA
KUMANA
BALANGODA
KALUTARA
BERUWELA
BENTOTA
RATNAPURA
TALA
KATARAGAMA
AMBALANGODA
HAMBANTOTA
HIKKADUWA
GALLE
TANGALLE
MATARA


Sri Lanka
Kankesanthurai
Point Pedro
Jaffna
Elephant Pass
Kilinochchi
Mullaitivu
Mankulam
Talaimannar
Mannar Island
Kokilai
Nilaveli
Vavuniya
Trincomalee
Anuradhapura
Mihintale
Polonnaruwa
Habarana
Puttalam
Sigiriya
Kalkudah
Dambulla
Batticaloa
Chilaw
Kurunegala
Marawila
Pinnawala
Kandy
Peradeniya
Arugam Bay
Negombo
Katunayaka
Badulla
Colombo
Kitulgala
Nuwara Eliya
Horton Plains
Pottuvil
Mount Lavinia
Bandarawela
Panadura
Horana
Ratnapura
Haputale
Kalutara
Beruwala
Bentota
Kataragama
Ambalangoda
Tissamaharama
Hikkaduwa
Hambantota
Galle
Tangalle
Weligama
Matara

**தேர்ச்சி 4.0** : பொருத்தமான வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கான முன்னாயத்தத்தை வெளிப்படுத்திக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : வணிகமொன்றை ஆரம்பிக்க முன்னர் மேற்கொள்ள வேண்டிய முக்கிய தீர்மானங்களை வெளிப்படுத்துவார்.

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்தினைக் கற்றபின் மாணவர்களுக்குப் பின்வரும் கற்றல் பேறுகளை அடைந்து கொள்ள முடியும்.

- நபரொருவர் வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்களைக் கலந்துரையாடுவதற்கும்
- தனிநபரொருவர் வணிகமொன்றை ஆரம்பிக்கும் பொழுது மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்களின் தன்மைகளை வெளிப்படுத்துவதற்கும்
- தனிநபரொருவர் வணிகமொன்றை ஆரம்பிக்க முன்னர் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்களை முக்கியத்துவத்திற்கேற்பத் தெரிவு செய்வதற்குமான கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :**

பாடத்திட்டத்தில் காணப்படும் இத்தேர்ச்சி பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் தொடர்புடைய பாடப் புத்தகத்தில் காணப்படும் பாட விடயங்கள் தொடர்பாகவும் சிறந்த முறையிலான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளவும். அத்துடன் பின்வரும் ஆலோசனைகள் மீதும் கவனஞ் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்திற்கமைய தொடக்கத்தில் பாடத்திற்குப் பிரவேசிப்பதற்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள புள்ளி விபர அட்டவணையைச் சமர்ப்பித்து சிந்தனைக் கிளரல் பயற்சியொன்றில் ஈடுபடச் செய்யுங்கள்.
- ஆரம்பிக்கப்படும் வணிகத்தின் வெற்றி அல்லது தோல்வி தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | நடாத்திச் செல்லல் | மூடப்படல் |
|---|---|---|
| 1ஆம் வருட இறுதியில் | 85% | 15% |
| 2ஆம் வருட இறுதியில் | 65% | 35% |
| 3ஆம் வருட இறுதியில் | 60% | 40% |
| 4ஆம் வருட இறுதியில் | 55% | 45% |
| 5ஆம் வருட இறுதியில் | 45% | 55% |
| 6ஆம் வருட இறுதியில் | 38% | 62% |

(மூலம் : Sam tingleff . com)

- மேற்காட்டிய வரைபடத்தின் புள்ளி விபரத் தகவல்களை முன்வைத்து தொடங்கப்படும் வணிகங்களில் இவ்வாறானதொருநிலை ஏற்படுவதில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய காரணங்களை கலந்துரையாடவும்.
- பொருட்கள், சேவைகள், எண்ணக்கரு மற்றும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களை முன்வைக்கும் பொழுது அதற்கான உதாரணங்களை வழங்கவும்.

உதாரணம் : விளையாட்டுக்கள், பரீட்சைகள், நாட்டியம், பாட்டுப்போட்டிகள், பொருட்கள் சேவைகள் எண்ணக்கரு, சந்தை எண்ணக்கரு என்பன முன்வைக்கும் பொழுது அதற்கான உதாரணங்களை வழங்குங்கள்.

**மாதிரி** : பல்வேறு அளவுகளிலும் நிறங்களிலும் தலை சீவும் சீப்புகளைச் முன்வைத்து அவற்றின் மூலம் நபர்களின் எவ்வாறான தேவை விருப்பங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்பதையும் ஒவ்வொரு வகைச் சீப்புக்களுக்குமான நுகர்வாளர்கள் யார் என்பதையும் கேட்டறிய முடியும்.

- வகுப்பிலுள்ள மாணவர்களைக் கொண்டு (தனித்தனியாக /குழுக்களாக ) பொருட்கள் சேவைகளை உள்ளடக்கிய (10 உருப்படிகள் மட்டும்) பட்டியலொன்றை பின்வரும் முறைக்கமைய தயாரிக்கச் செய்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும்.

| பொருள் அல்லது சேவை | நிறைவேற்றப்படும் தேவை விருப்பம் | நுகர்வோர் சந்தை |
|---|---|---|
| | | |

- தேவை விருப்பங்களுக்கிடையிலான வேறுபாடுகளையும், பொருட்கள் சேவைகளுக்கிடையிலான வேறுபாடுகளையும் தேவைப்படுமாயின் மீண்டும் நினைவிற்குக் கொண்டுவர முடியும்.
- போட்டி, உழைத்தல், மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளல் வணிகங்களைத் தனியுடைமையாகவோ பங்குடமையாவோ ஆரம்பித்தல் போன்ற எண்ணக்கருக்களை நடைமுறை ரீதியான உதாரணங்களை வழங்கி அவற்றின் கருத்தினை உறுதிப்படுத்தவும்.
- பின்வரும் தேடியறிதல் செயற்பாட்டில் ஈடுபடுத்தச் செய்வதன் மூலம் இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடவிடயங்களை அறிந்து கொள்ள முடியும். இதற்காக மாணவர்களைப் பொருத்தமான வகையில் குழுக்களாகப் பிரித்து அக்குழுவானது எதிர்காலத்தில் வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு எண்ணியுள்ளது என்ற கருதுகோளின் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கான விடையினை வழங்குவதற்கான செயற்பாடொன்றைத் திட்டமிடுங்கள்.

  உதாரணம் குழு I - பொருள்
  குழு I - சேவை

- வணிகத்தின் மூலம் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் பொருள் அல்லது சேவை எவை?
    - அப்பொருள் அல்லது சேவை யாருக்காக எத்தேவை விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக என்பது.
    - அப்பொருள் அல்லது சேவைக்கு தற்போது காணப்படும் போட்டியாளர்கள் யார்?
    - உத்தேச வணிகத்திற்குத் தேவையான மூலதனம் /பணம் எவ்வாறான முறையில் பெற்றுக் கொள்ளப்படும் என்பது தொடர்பாக.
    - அவ்வணிகம் எங்கு உருவாக்கப்படுகிறது.
    - நீங்கள் அவ்வணிகத்தின் நடவடிக்கைகளில் முழு நேரம் எனும் வகையில் ஈடுபடுகின்றீர்களா? அவ்வாறாயின் அது எவ்வாறு? குழுக்களது தேடியறிதல்களை முன்வைப்பதில் அவர்களைப் ஈடுபடுத்தி அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பாடவிடயங்கள் தொடர்பான விளக்கத்தினைப் பெற்றுக்கொடுக்கவும். இதற்காக விரிவுரையுடன் கூடிய கலந்துரையாடல் முறை, வினவுதல் முறைகளைப் பின்பற்ற முடியும்.
    - தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடமுடிவின் பின்னர் பின்வரும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.

(1) நபரொருவர் தனது வாழ்வாதார நிலைப்பாட்டிற்காக பின்வரும் இரு சந்தர்ப்பங்களில் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டியுள்ளது. அத்தெரிவு செய்தலுடன் தொடர்பான தீர்மானங்களும், அதற்காக அடிப்படையாக அமைந்த காரணங்களையும் வெளிப்படுத்தக் கூடிய முறையில் பயிற்சியொன்றில் ஈடுபடுத்தவும். அல்லாவிடின் இரு மாணவ குழுக்களாகப் பிரித்து விவாதமொன்றைக் கட்டியெழுப்புங்கள்.

1. தொழிலொன்றில் ஈடுபடல் 2. வணிகமொன்றை ஆரம்பித்தல்.

(2) வணிகமொன்றை ஆரம்பிப்பதற்காக மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பின்வரும் வழிமுறைகளில் காணப்படும் அனுகூலங்கள், பிரதிகூலங்களை எழுதுவதில் ஈடுபடுத்தவும்.

Ⅰ தனது சொத்தொன்றை விற்பனை செய்தல்.
Ⅱ உறவினர்கள், நண்பர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளல்.
Ⅲ வங்கிக் கடனொன்றைப் பெற்றுக்கொள்ளல்.
Ⅳ. அடகுக் கடன்

**அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :**

- வணிகமொன்றை ஆரம்பிக்க முன்னர் எடுக்க வேண்டிய தீர்மானங்கள்.

## தரஉள்ளீடு

- தரம் 10 பாடநூலில் 6 ஆம் பாட அலகு.
- வரைபடத்தின் பிரதியொன்று

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் ஒருவருக்கு அதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான தீர்மானங்கள் ஐந்தினைக் குறிப்பிடுவார்.
- வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்களைச் சுட்டிக்காட்டுவார்.
- வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் எடுக்க வேண்டிய தீர்மானங்களை முக்கியத்துவத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்துவார்.
- வணிகத்தை ஆரம்பிப்பதற்காக நிறுவன அமைவிடத்தைத் தெரிவு செய்வதில் கவனம்

செலுத்தப்பட வேண்டிய காரணிகளை தெளிவுபடுத்துவார்.

**தேர்ச்சி 4.0** : பொருத்தமான வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கான முன்னாயத்தத்தை வெளிப்படுத்திக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** புதிய வணிகமொன்றை ஆரம்பிக்கும் பொழுது சந்தையில் பிரவேசிக்கக் கூடிய மாற்று முறைகளையும், உபாய வழிமுறைகளையும் தேடியறிவார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்தினைக் கற்றபின் மாணவர்களுக்குப் பின்வரும் கற்றல் பேறுகளை அடைந்து கொள்ள முடியும்.

- முயற்சியாளரொருவர் வணிகமொன்றை ஆரம்பிப்பதற்குச் சந்தையில் பிரவேசிக்கக் கூடிய மாற்று முறைகளைச் சுட்டிக்காட்டுவதற்கும்
- முயற்சியாளரொருவர் சந்தையில் பிரவேசிக்கச் கூடிய மாற்று முறைகளில் காணப்படும் அனுகூலங்கள், பிரதிகூலங்களைச் சுட்டிக்காட்டுவதற்கும்
- புதிய வணிகமொன்றை ஆரம்பிப்பதற்காக பிரவேசிக்கும்போது முயற்சியாளரொருவர் பின்பற்றக் கூடிய உபாய வழி முறைகளை விளக்குவதற்குமான கற்றல்பேறுகளைப் பெற்றுக் கொள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

பாடத் திட்டத்தில் காணப்படும் இத்தேர்ச்சி பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் தொடர்புடைய பாடப் புத்தகத்தில் காணப்படும் பாட விடயங்கள் தொடர்பாகவும் சிறந்த முறையிலான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளவும். அத்துடன் பின்வரும் ஆலோசனைகள் மீதும் கவனஞ் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்தினடிப்படையில் பாடத் தொடக்கப் பிரவேசத்தின்போது இங்கே காட்டப்பட்டுள்ள அட்டவணையைக் காட்சிப்படுத்தி மாணவர்களின் கருத்துக்களை வினாத் தொடுத்தலினூடாகக் கருத்துப் பரிமாற்றலொன்றைக் கட்டியெழுப்புங்கள்.

| | | |
|---|---|---|
| தற்போது இருக்கும் பொருள் /சேவை | தற்போதுள்ள சந்தை | புதிய சந்தை |
| புதிய பொருள் /சேவை | புதிய சந்தை | நடைமுறையிலுள்ள சந்தை |

- கருத்துப் பரிமாற்றலின் பின்னர் மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து பின்வரும் முன்மொழியப்படும் இரண்டு செயற்பாடுகளில் ஒன்றைத் தெரிவு செய்து அச்செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.

(1) பின்வரும் தலைப்புக்களை குழுக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்.

1. தற்போது காணப்படும் சந்தைக்கு நடைமுறையிலுள்ள பொருள் அல்லது சேவையொன்றை வழங்கல்.
2. தற்போதுள்ள சந்தையொன்றிற்குப் புதிய பொருள் அல்லது சேவையொன்றை வழங்கல்
3. புதிய சந்தையொன்றிற்கு புதிய பொருள் அல்லது சேவையொன்றை வழங்கல்
4. புதிய சந்தையொன்றிற்கு இருக்கின்ற பொருள் அல்லது சேவையொன்றை வழங்கல்.

- குழுவிற்குக் கிடைத்த தலைப்பினை தெளிவுபடுத்திக் கொள்வதற்காக கலந்துரையாடலொன்றை நடாத்துவதற்கு ஆலோசனை வழங்கி அத்தலைப்பிற்கான பின்வரும் தகவல்களை முன்வைப்பதில் ஈடுபடுத்தவும்.
    - உங்களது சந்தை எது? அச்சந்தையில் நுகர்வோர் யார்?
    - அவர்களது பண்புகள் (வயது, ஆண், பெண், கொள்வனவு செய்யும் போக்கு) எவ்வாறாகவுள்ளது.
    - அவர்களுக்காக வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் பொருட்கள், சேவைகள் யாவை?
    - அப்பொருள் அல்லது சேவைகள் மூலம் எதிர்பார்க்கப்படும் நுகர்வோரது எவ்வாறான தேவைகள் விருப்பங்களை நிறைவுசெய்து கொள்ளப்படுகின்றன.

- மாணவர்களின் தேடியறிதல்களைச் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கி அத்தேடியறிதல்களைக் கருத்திற் கொண்டு வழங்கப்பட்டுள்ள பாடவிடயங்களைத் தெளிவுபடுத்தவும்.

- முயற்சியாளரொருவர் புதிய வணிகமொன்றை ஆரம்பிக்கும் போது சந்தையில் பிரவேசிக்கக் கூடிய பின்வரும் மாற்று முறைகளில் காணப்படும் அனுகூலங்கள், பிரதிகூலங்களை எழுதிக் காட்டுதல்.
    - I தற்போதுள்ள சந்தைக்கு நடைமுறையிலுள்ள பொருள் அல்லது சேவையொன்றை முன்வைத்தல்.
    - II. நடைமுறையிலுள்ள சந்தையொன்றிற்கு புதிய பொருள் அல்லது சேவையொன்றை முன்வைத்தல்.
    - III. புதிய சந்தையொன்றிற்குப் புதிய பொருள் அல்லது சேவையொன்றை முன்வைத்தல்.
    - IV. புதிய சந்தையொன்றிற்கு நடைமுறையில் இருக்கின்ற பொருள் அல்லது சேவையொன்றை முன்வைத்தல்.

- மேற்காட்டிய ஒவ்வொரு சந்தர்ப்பங்களுக்கும் ஒவ்வொரு உதாரணங்கள் வீதம் சமர்ப்பிப்பதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்தச் செய்யவும். இதனைத் தனிச் செயற்படாக அல்லது குழுச் செயற்பாடாக வழங்க முடியும்.

**அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :**
- சந்தையில் பிரவேசிப்பதற்கான மாற்று வழிமுறைகள்.
- வணிகமொன்றில் பிரவேசிப்பதற்கான மாற்று வழிமுறைகள்.

## தரஉள்ளீடு
- தரம் 10 பாடநூலில் 6ஆம் பாட அலகு.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**
- வணிகமொன்றை ஆரம்பிக்கும் பொழுது சந்தையில் பிரவேசிக்கக் கூடிய மாற்று முறைகளைச் சுட்டிக்காட்டுவார்.
- சந்தையொன்றில் பிரவேசிக்கக்கூடிய மாற்றுமுறைகளில் காணப்படும் அனுகூலங்கள், பிரதிகூலங்களைச் சுட்டிக்காட்டுவார்.
- வணிகமொன்றை ஆரம்பிக்கும் பொழுது பின்பற்றக்கூடிய பொருத்தமான உபாய

வழிமுறைகளை காரணங்களுடன் விளக்குவார்.

**தேர்ச்சி 4.0** : பொருத்தமான வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கான முன்னாயத்தத்தை வெளிப்படுத்திக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3 :** வணிகமொன்றிற்காக வணிக எண்ணமொன்றைத் தெரிவு செய்வார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்தினைக் கற்றபின் மாணவர்க்ள பின்வரும் கற்றல்பேறுகளை அடைந்து கொள்ள முடியும்.

- வணிக எண்ணங்களை உதாரணங்களுடன் விபரிப்பதற்கும்
- வணிகமொன்றிற்குச் சிறந்த வணிக எண்ணமொன்றின் முக்கியத்துவத்தை காரணங்களுடன் விபரிப்பதற்கும்
- வணிக எண்ணத்தை உருவாக்கக்கூடிய மூலங்களை உதாரணங்களுடன் சுட்டிக்காட்டுவதற்குமான கற்றல் பேறுகளைப் பெற்றுக் கொள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

இத்தேர்ச்சி பாடவிதானத்தில் காணப்படும் பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் தொடர்புடைய பாடப் புத்தகத்தில் காணப்படும் பாட விடயங்கள் தொடர்பாகவும் சிறந்த முறையிலான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளவும். அத்துடன் பின்வரும் ஆலோசனைகள் மீதும் கவனஞ் செலுத்தவும்.

- சூழலில் ஏற்படும் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு புதிய வணிகமொன்றை ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பத்தை வழங்கி சிந்தனைக் கிளறல் பயிற்சியொன்றில் ஈடுபடுத்தவும். சமர்ப்பிக்கப்படும் எல்லா கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ளுங்கள். அவற்றைக் கரும்பலகையில் எழுதுங்கள்.
- சிந்தனைக் கிளறலைக் குழுச் செயற்பாடொன்றாகச் செய்ய முடியும். இங்கு மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து வணிகக் கருத்துக்களை உருவாக்குவதற்கு குழுக்களிடம் ஒப்படையுங்கள்.
- தெரிவு செய்த தலைவரொருவரின் மூலம் குழுக்களது வணிகக் கருத்துக்களை முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கவும். பின்னர், மாணவர்களைப் பின்வரும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- இதற்கு 20 நிமிடங்கள் போதுமானது.

வகுப்பிலுள்ள மாணவர்களை மூன்று குழுக்களாக வகைப்படுத்தவும்

**I ஆவது குழு**

- நாம் மிகவும் விரும்புபவைகள் /பொழுதுபோக்குகள் ஐந்தைக் குறிப்பிடவும்.
- அவ்விருப்பங்கள் /பொழுதுபோக்குகளினூடாக வணிகக் கருத்துக்கள் ஐந்தினை உருவாக்கச் செய்யவும்.
- குழுக் கலந்துரையாடலின் பின்னர் புதிய வணிகத்திற்குப் பொருத்தமான ஒரு கருத்தினைத் தெரிவு செய்து வகுப்பில் சமர்ப்பிக்கச் செய்யவும்.
- தெரிவு செய்த வணிகக் கருத்தினைத் தெரிவு செய்வதற்கான காரணங்களைப் பெற்றுக்

கொள்ளுங்கள்.

**II ஆவது குழு**

- விளம்பர அறிவித்தல்களை உள்ளடக்கிய பத்திரிகையின் பக்கமொன்றை வழங்கவும்.
- அவ்விளம்பர அறிவித்தல்களை வாசித்துப் புதிய வணிகத்திற்குப் பொருத்தமான வணிகக் கருத்துக்கள் ஐந்தினை உருவாக்கவும்.
- குழுக் கலந்துரையாடலின் பின்னர் புதிய வணிகத்திற்குப் பொருத்தமான ஒரு வணிகக் கருத்தை தெரிவு செய்து வகுப்பில் முன்வைக்கச் செய்யவும்.
- தெரிவு செய்த வணிக கருத்தைத் தெரிவு செய்தமைக்கான காரணங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

**III ஆவது குழு**

- நபரொருவரின் தனிப்பட்ட திறன், அனுபவங்கள், அல்லது பழக்க வழக்கங்கள் 05 இனை எழுதச் செய்யவும்.
- அத்திறன்கள், அனுபங்களுக்கமைய புதிய வணிகமொன்றிற்குப் பொருத்தமாக அமையும் வணிகக் கருத்துக்கள் ஐந்தினை உருவாக்கச் செய்யவும்.
- குழுக் கலந்துரையாடலின் பின்னர் சிறந்த வணிகக் கருத்தொன்றினைத் தெரிவு செய்து முழு வகுப்பிற்கும் முன்வைக்கச் செய்யவும்.
- தெரிவு செய்த கருத்தினை தெரிவு செய்தமைக்கான காரணத்தைக் கேட்டறியவும்.
- மாணவர்களது ஆக்கங்களை முன்வைத்தன் பின்னர் வழங்கப்பட்டுள்ள பாடவிடயங்கள் தொடர்பாக விளக்கங்களைப் பெற்றுக் கொடுக்கவும். இத்தேர்ச்சி மட்டத்திற்கான பாடங்களின் பின்னர் பின்வரும் செயற்பாடுகளை மாணவர்களுக்கு வழங்குவதற்காக ஆலோசனை வழங்கப்படும்.
- சகல மாணவர்களைக் கொண்டும் வணிகக் கருத்துக்களை ஐந்து வீதம் எழுதுதல்.
- அவ்வொவ்வொரு கருத்துகளினதும் சிறப்புத் தன்மையினைக் கூறுதல்.
- குறைந்தது மாணவர்கள் மூன்று பேர்களைக் கொண்டதாக குழுக்களைப் பிரித்து அம்மாணவர் மூவருக்கிடையில் அவரவர்களுக்கிடையில் வணிகக் கருத்துக்களைப் பரிமாற்றச் செய்து விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதில் ஈடுபடுத்தி அத்தகவல்களை முழு வகுப்பிற்கு முன்வைக்கச் செய்யவும்.

**அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :**

- வணிக எண்ணங்கள்.
- வணிக எண்ணங்களின் மூலகங்கள்.

## தர உள்ளீடு

- தரம் 10 பாடநூலில் 7ஆம் பாட அலகு.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- வணிகக் கருத்துக்களுக்குப் பொருத்தமான ஐந்து உதாரணங்கள் காட்டுவார்.
- சிறந்த வணிகக் கருத்தொன்றின் தேவைப்பாட்டினையும் அதன் முக்கியத்துவத்தினையும் விரிவாக விளக்குவார்.
- வணிகக் கருத்துக்களை உருவாக்கிக் கொள்ளக்கூடிய மூலங்களுக்கான உதாரணங்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி 4.0** : பொருத்தமான வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கான முன்னாயத்தத்தை வெளிப்படுத்திக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.4 :** வணிக வாய்ப்பொன்றின் பொருத்தப்பாட்டினைக் கணிப்பிடுவார்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்தினைக் கற்றபின் மாணவர்கள் பின்வரும் கற்றல் பேறுகளை அடைந்து கொள்ள முடியும்.

- வணிக எண்ணத்திற்கும் வணிக் வாய்ப்பிற்குமிடையிலான வேறுபாட்டை விபரிப்பதற்கும்
- சிறந்த வணிக வாய்ப்பினை மதிப்பிடுவதற்காக பயன்படுத்தக் கூடிய நியதிகளைச் சுட்டிக்காட்டுவதற்கும்
- புதிய உற்பத்திப் பொருளொன்றிற்குச் சட்ட ரீதியான பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய செயல்முறைகளைச் சுட்டிக்காட்டுவதற்குமான கற்றல் பேறுகளை பெற்றுக் கொள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

பாடத்திட்டத்தில் காணப்படும் இத்தேர்ச்சியில் பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் தொடர்புடைய பாடப் புத்தகத்தில் காணப்படும் பாட விடயங்கள் தொடர்பாகவும் சிறந்த முறையிலான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளவும். அத்துடன் பின்வரும் ஆலோசனைகள் மீதும் கவனஞ் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்திற்கமைய முதலாவது பாடப் பிரவேசத்தின் போது பொம்மையொன்றை (ஆடை அணிகளின்றி) அல்லது பொம்மையொன்றின் படத்தை வகுப்பில் முன்வைத்து அப்பொம்மையின் பொருட்டு முயற்சியாளரொருவரினால் மேற்கொள்ளக் கூடியவற்றைக் கேட்டறிந்து சிந்தனைக் கிளறல் பயிற்சியொன்றில் ஈடுபடுத்தவும். மாணவர்களினால் சமர்ப்பிக்கப்படும் அனைத்து எண்ணங்களையும் வணிக எண்ணங்களாகக் கருதமுடியும் என உறுதிப்படுத்துங்கள். எல்லா வணிகக் கருத்துக்களும் வணிகமொன்றை ஆரம்பிப்பதற்குப் பொருத்தமற்றது என்பதனால் வணிக ரீதியாக வெற்றியளிக்கக் கூடியதான எண்ணமொன்றைத் தெரிவு செய்தல் வேண்டும் எனவும் அதற்காக வணிக எண்ணங்கள் மதிப்பீட்டிற்குட்படுத்தப்படல் வேண்டும் என்பதனைத் தெளிவுபடுத்தி பின்வரும் ஆலோசனைகளுக்கமைய மாணவர்களை குழுக்களாக வகைப்படுத்தி செயற்பாட்டில் ஈடுபடுத்த முடியும். குழுக்களுக்கு மாணவர் எண்ணிக்கை போதாவிடின் தனித்தனியாக மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்த முடியும்.

**1ஆவது படிமுறை - பேரினப் பகுப்பாய்வு**

- பொருத்தமான வகையில் மாணவர்களை குழுக்களாக வகைப்படுத்தவும்.
- குழுக்களின் மூலம் ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான வணிக எண்ணங்களை இயன்றளவில் உருவாக்கி அவற்றை எழுதுவதில் ஈடுபடுத்துங்கள்.
- தனது பொதுவான விளக்கத்திற்கமைய வணிகமொன்றை மேற்கொள்வதற்குப் பொருத்தமானது என அனுமானிக்கக் கூடிய எண்ணங்கள் 10இனைத் தெரிவு செய்வதற்கு ஆலோசனை வழங்கவும்.

**II ஆவது படிமுறை - சிற்றினப் பகுப்பாய்வு**

- 1ஆவது படிமுறையில் மாணவர் குழுவினைத் தெரிவு செய்யவும். முன்னைய படிமுறையின் எண்ணங்களிலிருந்து மிகவும் பொருத்தமானது எனக் கருதப்பட்ட

வணிகக் கருத்தினை மட்டும் தெரிவு செய்வதற்கு ஆலோசனை வழங்கவும்.

- பின்வரும் மாதிரியில் காட்டப்பட்டுள்ள நியதிக்கமைய 0 - 10 வரையிலான புள்ளி இடைவெளிகளில் புள்ளி வழங்கவதற்கு ஆலோசனை வழங்கவும். அந்நியதிகளின் பொருத்தப்பாட்டின் தன்மை அதிகமாக இருப்பின் உயர் புள்ளியையும் பொருத்தப்பாடு குறைவாக இருப்பின் இழிவு மட்டப் புள்ளியையும் வழங்கவும்.

| மதிப்பீட்டிற்காகப் பயன்படுத்தக் கூடிய நியதிகள் / வணிக எண்ணங்கள் | சந்தைக் கேள்வி (விற்பனை செய்யக் கூடிய இயலுமை ) | தேவையான ஊழியர்களை பெற்றுக் கொள்ளக்கூடிய இயலுமை | தேவைப்படும் மூலப்பொருட்களையும் பெற்றுக் கொள்ளக்கூடிய இயலுமையும் | தேவைப்படும் தொழில்நுட்பம் உபகரணங்கள் என்பவற்றைப் பெற்றக்கொள்ளக் கூடிய இயலுமை | போட்டி நிலைகளுக்கு முகங் கொடுக்கக்கூடிய இயலுமை | மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இயலுமை | அரச ஊக்குவிப்புக்கள் இருத்தல் | தனது அறிவு, திறன் அனுபவம் , நாட்டம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. ................................... | | | | | | | | | |
| 2. ................................ | | | | | | | | | |
| 3. ................................ | | | | | | | | | |
| 4. ................................ | | | | | | | | | |

## III ஆவது படிமுறை - ப, ப,வா,அ (SWOT) பகுப்பாய்வு

- பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் என்பவை தொடர்பாக உதாணரங்களுடன் விளக்கப்படுத்தி அது தொடர்பான சிறந்த விளங்கமொன்றினைப் பெற்றுக் கொடுக்கவும்.
- மேலே காட்டிய படிமுறையின் மாணவர் குழுக்களையே பயன்படுத்தவும்.
- 11ஆவது படிமுறையின் மதிப்பீட்டின் மூலம் கூடிய புள்ளிகளை பெற்ற வணிக எண்ணங்கள் மூன்றை மட்டும் தெரிவு செய்வதற்கு ஆலோசனை வழங்கவும்.
- முன்னர் குறிப்பிட்டது போல 0 - 10 வரையிலான புள்ளிஇடைவெளியில் புள்ளிகள் பின்வரும் மாதிரியில் காட்டப்பட்டுள்ளன. நியதிகளுக்கமைய வழங்குவதற்கு ஆலோசனை வழங்கவும்.

| வணிக எண்ணங்கள் | பலன்கள் | பலவீனங்கள் | வாய்ப்புக்கள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

- இங்கு அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற எண்ணம் வணிகத்திற்காகத் தெரிவு செய்யப்படும்.
- இத்தேர்ச்சி மட்டத்திற்கேற்ப பாட முடிவின் பின்னர் பின்வரும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு ஆலோசனை வழங்கவும்.
- வணிக எண்ணங்களை வணிக வாய்ப்பொன்றாக்கிக் கொள்ளக்கூடிய பொருத்தமான எண்ணமொன்றைத் தெரிவு செய்தல் வரையிலான படிமுறைகளைப் பின்பற்றி வணிக வாய்ப்பொன்றைத் தீர்மானிப்பதற்காக தனியாள் ஒப்படையொன்றை மேற்கொள்வதற்கு இங்கு முன்மொழியப்படுகின்றது. இங்கு பின்வரும் ஆலோசனைகளை மாணவர்களுக்கு வழங்கவும். இதற்குத் தேவையானளவு காலத்தை வழங்கவும்.

**I ஆவது படிமுறை**

- வணிக எண்ணங்கள் இயன்றவு உருவாக்கி தனது விளக்கம் தெளிவு என்பவற்றிற்கேற்ப அவற்றிலிருந்து பொருத்தமான வணிக எண்ணங்கள் பத்தினைத் தெரிவு செய்தல்.

**II ஆவது படிமுறை**

- அவ்வணிக எண்ணங்கள் 10 சிற்றினப் பகுப்பாய்விற்காகப் பயன்படுத்திய காரணிகளைக் கருத்திற் கொண்டு புள்ளி 0 -10 வரையிலான புள்ளி இடைவெளிகளினடிப்படையிலி புள்ளிகளை வழங்கி கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் மூன்று எண்ணங்களைத் தெரிவு செய்தல்.

**III ஆவது படிமுறை**

- அவ்வணிக எண்ணங்கள் மூன்றினை ப.ப.வா.அ (SWOT) பகுப்பாய்வுக்குட்படுத்தி வணிக வாய்ப்பொன்றாக்கிக் கொள்ளக்கூடிய பொருத்தமான வணிக எண்ணத்தினைத் தெரிவு செய்தல்.

**அடிப்படைப் பதங்கள் /எண்ணக்கரு :**

- வணிக வாய்ப்புக்கள்.
- சிறந்த வணிக வாய்ப்பொன்றின் பண்புகள்.
- சிற்றினப் பகுப்பாய்வு
- ப.ப.வா.அ (SWOT) பகுப்பாய்வு
- பேட்டன்ட் உத்தரவுப் பத்திரம்.

## தரஉள்ளீடு

- தரம் 10 பாடநூலில் 7ஆம் பாட அலகு.
- மாதிரிகளின் பிரதிகள்
- சிந்தனைக் கிளறலுக்குத் தேவையான பொருட்கள்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- சகல வணிக எண்ணங்களும் சிறந்த வணிக வாய்ப்பொன்றாக இருக்க முடியாது என உறுதிப்படுத்தல்.
- முறையான வழிமுறையொன்றைப் பின்பற்றி வணிக வாய்ப்பொன்றாக்கிக் கொள்ளக் கூடிய வணிக எண்ணத்தைத் தெரிவு செய்தல்.
- வணிக வாய்ப்பொன்றாக்கிக் கொள்ளப்பட்ட வணிக எண்ணித்திற்குச் சட்ட ரீதியான பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய முறையினை விபரித்தல்.